# அரசியல் அமைப்பு வழி காட்டிக் குழுவில்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 183
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 28 ஜமா. ஆகிர் 10 வியாழக்கிழமை [13-8-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# மார்ட்டின், அருள்

## ஸ்ரீமா தலைமையில் நியமனம்

—நமது கொழும்பு நிருபர் மு. சின்னத்துரை—

கொழும்பு, புதன்

இலங்கையின் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டு, விஷயாலோசனைக் குழுவொன்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் இன்று நிறுவப்பட்டது.

இக்குழுவில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு ஸி எக்ஸ் மார்ட்டின் தமிழ்க்காங்கிரஸ்கட்சியை சேர்ந்த திரு அருளம்பலம் உட்பட 15 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையின் புதிய அரசியல் திட்டத்தை ஆக்குவதில் இக்குழு பெரும்பங்கு வகிக்குமெனக்கருதப்படுறது இக்குழுவில் எல்லாக்கட்சிகளையும்சேர்ந்தவர்கள்இடம் பெற்றுள்ளனர்.

இக் குழுவின் மற்றைய உறுப்பினர்கள்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, கொல்வின் ஆர், டி, சில்வா, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, என், எம். பெரேரா ரி பி சுபசிங்கா, பதியுதீன் முகமத், மைத்திரிபாலசேன நாயக்கா, ரி பி இலங்கரத்தின, எச் கொப்பகடுவ, ஜோர்ஜ் ராஜபக்ஸ, ரி பி தென்னக்கூன், பீற்றர் கெனமன்.

### இரத்தினபுரி தேர்தல்

## ஆட்சேப மனு மீதான வழக்கு இன்று விசாரணை

கொழும்பு, புதன்

கொழும்பு நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட இரத்தினபுரித் தேர்தல் ஆட்சேப வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இவ்வழக்கை நீதியரசர் கிரேசர் விசாரிப்பார். மேற்படி வழக்கை திரு. பி. விஜயசுந்தரா தாக்கல்செய்திருந்தார்.

இரத்தினபுரித் தேர்தல் தொகுதிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த நந்தா எல்லவெல தெரிவுசெய்யப்பட்டது தெரிந்ததே.

அண்மையில் கொண்டுவரப்பட்ட அரசியல் திருத்தச் சட்டம் இவருக்காகவே கொண்டுவரப்பட்டதாக ஆட்சிமன்றத்தில் எதிர்க்கட்சியினராலும், செனட்டர்களாலும் குற்றஞ்சாட்டப்பட்டது. செனட்டில் அத்திருத்தச் சட்டம் தோல்வியடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

### புதிய கமிஷனர்கள

கொழும்பு, புதன்

இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத்துரிதமாக அமுல் நடத்துமுகமாக மேலதிகமாக 32 உதவிக் கமிஷனர்களை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு திரட்டுகின்றது. இப்போது குடியேற்றவெளியேற்ற இலாகாவில் 20 கமிஷனர்களே கடமையாற்றுகின்றனர்.

(சி பி ஏ)

### நாட்டுக்கேற்ற கல்விபோதிக்கும் வகையில்

# கல்வி சீர்திருத்தத்துக்கான புதிய இரு சட்டங்கள் வரும்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கோட்டை, புதன்

**தற்போதைய கல்விமுறையை சீர்செய்வதற்காக இரு புதிய சட்டமூலங்களை வெகுவிரைவில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் இசசட்டமூலங்களின்படி நாட்டின் தேவைக்கேற்றவகையில் மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்படும் என்றும் கல்வி அமைசசர் அல்ஹாஜ் பதூதீன் முகம்மது கூறினர்.**

நேற்று விசாக வித்தியாலயத்தில் மனையியல் பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியகல்வியமைச்சர் அல் ஹாஜ் பதூதீன் முகமதுமேற்கண்ட தெரிவித்தார்.

அவர்மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்று நாட்டின் கல்வி நிலை ... புதிய சட்டமூலங்களைத் தாக்கல் செய்யவிருக்கிறேன்:

வருங்காலத்தின் சிறந்த குடும்பத் தலைவியர்களையுருவா[illegible] வேண்டியது மனையியல் ஆசிரியர்களின் தலையாய தொண்டாகும். மனையியல் ஆசிரியர்களுக்கு நல்ல பயிற்சியளிப்பதற்காக அரசாங்கம் தெரிவு செய்து 50 [illegible]ர்களை இந்தியாவுக்கு ...

கல்விநிலை சீராக அமையும் நாட்டின் நலங்காக்க ஆசிரியர்கள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

## 5-வது ஆண்டு நிர்வாகிகள்

பூநகரி, புதன்

பூநகரி படித்த இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் ...

## நாவற்குழி கொலை வழக்கு: எதிரிகள் ஐவரும் விடுதலை

மட்டுவில் புதன்

நாவற்குழியில் துப்பாக்கியால் சுட்டு செல்வம் என்ற வாலிபரைக் கொலை செய்த வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் கே. தம்பிராஜா எஸ். நவரத்தினம் கே. இரத்தினம் எம் மார்க்கண்டு ஏ சின்னத்துரை ஆகியோர் மீது சாவகச்சேரிப் பொலீசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்

இந்த வழக்கை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே விக்னராஜா விசாரணை செய்தார்விசாரணைமுடிவில் மாஜிஸ்திரேட் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## "சிங்கள ஆசிரியர் நியமனத்தை எதிர்த்தே தீருவோம்"

— செனட்டர் நடராசா

### கொடிகாமம் பஸ் சாரதி வழக்கு

# 'ஐயனை சுட்டாச்சு என்று கடையில் கதைத்தார்கள்'

யாழ்ப்பாணம், வியா

'சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஒரே ஓட்டமாக வீடுபோய் சாப்பிடாமல் படுத்து விட்டேன். மறுநாள் காலை 10 மணிக்கு என் மகள் என்னை எழுப்பினர் நான் கிணற்றடிக்குப் போனேன். பக்கத்திலுள்ள கடையில் 'ஐயனை சுட்டாச்சு' என்று கதைத்தார்கள் ...

வழ. வீட்டை போன போது யார் நின்றீர்கள்? நான் சாப்பிடாமல் படுத்துவிட்டேன்.

வழ: வீட்டுக்கு கிட்ட விதானையார் வீடு இருக்கிறது?-ஆம்.

வழ: விதானையாருக்கு நடந்ததை சொல்லியிருக்கலாம்?- நான் சொல்லவில்லை

வழ: மறுநாள் காலையில் ... தார்.

வழ: கண்டாவளையில் எவ்விடத்தில் பஸ்ஸில் ஏறினீர்?-சந்தைக்குக் கிட்ட.

வழ: பஸ் நேரம் தெரியாதா?- கண்டாவளை பஸ் ஆகப் பிழை. ஒரு மாதத்திற்கு ஒரு மாதிரி ஓடும்.

வழ: பங்குனி மாதம் எப்படி ஓடியது?- 8 மணிக்குஒரு பஸ்ஸும் பின் ஒருவான் 12 மணி ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சிங்கள ஆசிரியர் நியமனத்தை எதிர்த்தே திருவோம்"

### — செனட்டர் நடராசா

பூநகரி, புதன்

'வடபகுதியில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதை எமது கட்சியும் நாமும் ஆட்சிமன்றத்துக்கு வெளியேயும் உள்ளேயும் தீவிரமாக எதிர்த்தே திருவோம். தமிழ்மக்கள் சிங்களம் கற்பதை விரும்பினுல் நிச்சயமாக எமது மொழியும் இனமும் அழிய வேண்டிய நிலை ஏற்படும்'

இவ்வாறு பூநகரி கோட்டை மைதானத்தில் திரு. சி. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற தமிழரசக்கட்சிக் கூட்டத்தில் செனட்டர் சு. நடராசா பேசும்போது குறிப்பிட்டார்

உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

எமது கட்சியின் சமஷ்டி ஆட்சிமுறையை ஏன் சிங்கள மக்களும் அரசாங்கமும் எதிர்க்கின்றனர் என்பது தெரியவில்லை. உலகநாடுகள் பலவற்றில் சமஷ்டி ஆட்சிமுறை நன்கு நடைபெறுகின்றது நாம் இறுதி மூச்சிருக்கும்வரை சமஷ்டியைப் பெறுவதற்காகப் போராடுவோம்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம் பேசுகையில் சிறுபான்மைத் தமிழர்களுக்காக நாம் பல போராட்டங்கள் நடத்தினேம். அவர்களின் சார்பாக எமது கட்சி சிறுபான்மை இனத்தவரான ஜி. நல்லையாவை முதலில் செனட்டராக நியமித்தது எனச் சொன்னுர்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு மு. ஆலாலசுந்தரம், திரு. ச. இராமகிருஷ்ணன் உட்பட வேறுபலரும் பேசினர்.

பதாதீன் முகமது மேற்கண்ட தெரிவித்தார்.

அவர்மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்று நாட்டின் கல்வி நிலை நாட்டின் தேவைக்கேற்றதாக அமையவில்லை. நாட்டின் தேவைக்கேற்றதாகக் கல்விநிலை மாற வேண்டுமானுல் தற்போதைய கல்வி நிலையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படுவது அவசியமாகும். எனவே நான் வெகுவிரைவில் ஆட்சிமன்றத்தில் இரு

யியல் ஆசிரியர்களின் தலையாய தொண்டாகும். மனையியல் ஆசிரியர்களுக்கு நல்ல பயிற்சியளிப்பதற்காக அரசாங்கம் தெரிவு செய்து 50 [illegible]ர்களை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளது. மேலும் தொடர்ந்து இவ்வாறு பயிற்சியளிக்க மனையியல் ஆசிரியர்களைத் தெரிவுசெய்து இந்தியாவுக்கு அரசாங்கம் அனுப்பிவைக்கும்.

ஆசிரியர்கள் இடமாற்றத்தால் மனந்தளரக்கூடாது. தற்போது இடமாற்றத்தில் செல்லும் ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்வதில்லை. ஆசிரியர்கள் இவ்வாறு செய்யாது கிராமங்கள் நகரங்கள் ஆகிய யாவற்றிலும் சமமானசேவை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாட்டின்

## சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம், வியா.

நீர்வேலி விநாயகர் சனசமூகத்தினர் இம்மாதம் 8-ந் திகதி சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை செய்தனர்.

ஆசிரியர் திரு. த. மயில்வாகனம் சுந்தரர் செய்த சமயப்பணி என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினுர்.

## களவு

கைதடி, புதன்

கைதடி அரசாங்க வைத்தியசாலைக்குரிய 'மேக்குறி பல்ப் இரண்டும் 'பியூஸ் பொக்ஸ்' ஒன்றும் களவாடப்பட்டுள்ளதாக மேற்படி வைத்தியசாலை அதிகாரி திரு. கே. நல்லையா சாவகச்சேரிப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இந்த பல்புகளைப் பாவிப்பதானுல் அதிகவரி மின்சாரப்பகுதிக்குக் கட்டவேண்டியிருப்பதால் இவற்றைப் பாவிப்பதை வைத்தியப்பகுதி மேலிடம் 4 மாதங்களின் முன் தடைசெய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

0 0 0

தாவடி, செவ்.

தாவடிப் பகுதியைச் சேர்ந்த ஒரு தோட்டத்தில் 1500 ரூபா பெறுமதியான மோட்டர் ஒன்று திருடப்பட்டுள்ளதாக சுன்னுகம் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 5-வது ஆண்டு நிர்வாகிகள்

பூநகரி, புதன்

பூநகரி படித்த இ[illegible]ர் முன்னேற்றச் சங்க[illegible]ன் 5-வது ஆண்டுப்பொதுக்கூட்டம் மேற்படி சங்க நூல் நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்னை பற்றி ஆராயப்பட்டது. புதிய நிர்வாக உத்தியோகத்தர் தெரிவின்போது தலைவராக பொ. விஜயகமூர்த்தியும், பொதுக்காரியதரிசியாக பொ. தில்லைநாதனும், பொருளாளராக செ. ஜெகநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். காப்பாளர்களாக தொகுதி எம். பி. யும், காரியாதிகாரி திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தியும், கி. ச. தலைவர் திரு. இராசநாயகமும் மற்றும் 7 பேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நூல்நிலையம் ஒருசர்வகலாசாலை

யாழ்ப்பாணம், வியாழன்

"நூல்நிலையங்களை எத்தனை ஆயிரம் செலவழித்துக் கட்டினுலும் அதுசாலச்சிறந்த கைங்கரியமாகும் குடியேற்றப்பகுதியில் வாழும் வறிய மக்களுக்கு இது வரப்பிரசாதம் சிரேட்டவகுப்பு மாணவர்கள் படிக்க கலைநூல்கள் வாங்க கதியற்று இருக்கிறுர்கள் அவர்களுக்குரிய தலையாய நூல்களை இங்கு தேடிவைப்பது தக்கது. ஆகவே இத்தகைய நூல்நிலையம் ஒரு சர்வகலாசாலையாக படித்தவர்களுக்கு அமையும் முதியவர்களுக்குரிய நூல்களும் இடம் பெற்றுள்ளன கரைச்சி கிராமசபை இலங்கையில் சரித்திரப்பிரசித்திவாய்ந்த நன்மைகளை செய்கிறது. இதற்கு வேண்டிய நிதியை நான் அரசிடம் பெற்றுக்கொடுப்பேன்"

இவ்வாறு முரசுமோட்டையில் கரைச்சி கிராமசபையால் 15000 ரூபாவில் அமைக்கபப்ட்ட பொது நூலகத்தை திறந்துவைத்து பேசிய கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி. ஆனந்தசங்கரி கூறினுர்.

கிராமசபைத் தலைவர் திரு. த[illegible] செல்லத்துரை தலைமைதாங்கினுர் உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ யோசெவ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்

கரைச்சி காரியாதிகாரி திரு இ. யோகநாதன் வண

பிதா ஏ. சீ. தப்பிராசா, கரைச்சி தமிழாசிரியர்சங்கத்தலைவர் திரு. ஆர். ரீ. சுப்பிரமணியம் திரு. எவ். எக்ஸ். எட்வேட் பொலிஸ் அதிபதி ரி. கந்தையா ப. நவநீதராசா நா. கதிர்காமத்தம்பி உட்படப்பலர் பேசினுர்கள்.

நாலு நாடகங்களும் பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (கு வி ம)

த்து விட்டேன். மறுநாள் காலை 10 மணிக்கு என் மகள் என்னை எழுப்பினுர் நான் கிணற்றடிக்குப் போனேன். பக்கத்திலுள்ள கடையில் 'ஐயனை சுட்டாச்சு' என்று கதைத்தார்கள். இரவு நடந்த சூடு இதுதான் என்று நினைத்தேன். வீட்டிற்கு போனேன் பிள்ளை தந்த தண்ணீயை குடித்து விட்டு கொடிகாமம் போனேன்.

கொடிகாமம் பஸ் சாரதி கொலை வழக்கில் எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஜே ஏ. பி. செரிபிம் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சியமளித்த சின்னர் சண்முகம் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் கொடிகாமத்தில் பஸ் சாரதி சின்னப்பொடி வேலு அல்லது ஐயாவை கொலை செய்ததாக தம்பிமுத்து கணேசமூர்த்தி, தம்பிமுத்து நவரத்தினம் பெருமாள் இராமலிங்கம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அட்வகேட் செரிபிம் சாட்சியமளித்த சண்முகத்தை தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: வீட்டுக்கு கிட்ட விதானையார் வீடு இருக்கிறது?-ஆம்.

வழ: விதானையாருக்கு நடந்ததை சொல்லியிருக்கலாம்?- நான் சொல்லவில்லை

வழ: மறுநாள் காலையில் ஏன் சொல்லவில்லை?-யாரை சுட்டதென்று எனக்கு தெரியது.

வழ: சூடு வாங்கியது ஐயன் என்றுல் விதானையாருக்கு சொல்லியிருப்பீர்?- எனக்கு ஐயன் என்று தெரியாது.

வழ: மறுநாள் மத்தியானம் சாப்பிடவில்லை?-சாப்பிடவில்லை.

வழ: காலையிலும் சாப்பிடவில்லை?-தேநீர் குடித்தேன்.

வழ: ஏன் விதானையாரிடம் போகவில்லை?- நான் போகவில்லை. விதானையாரிடம் போகவேண்டும் என்று தெரியாது.

வழ: ஏன் பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை?-தெரியாது.

வழ: நீதவான் வருமுன் சொந்தக்காரர்களை சந்தித்திரா?-ஆம்.

வழ: அவர்களுக்கு சொன்னீரா?-இல்லை.

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் எஸ். தம்பிரத்தினம் சாட்சியமளித்த சண்முகத்தை குறுக்குவிசாரணை செய்

[illegible] ?-சந்தைக்குக் கிட்ட.

வழ: பஸ் நேரம் தெரியாதா?- கண்டாவளை பஸ் ஆகப் பிழை. ஒரு மாதத்திற்கு ஒரு மாதிரி ஓடும்.

வழ: பங்குனி மாதம் எப்படி ஓடியது?- 8மணிக்குஒரு பஸ்; பின் ஒருவான் 12 மணிக்கு1 பஸ்; 4 பணிக்கு ஒரு பஸ். அவ்வளவு தான்.

வழ: காலை 8 மணிக்கும் மாலை 8 மணிக்கும் வித்தியாசம் தெரியுமா?- தெரியாது.

வழ: வாசிக்கத் தெரியுமா?- ஆம்.

வழ: வெடிச்சத்தம் கேட்ட நேரம் றேட்டில் ஐயனை மட்டும் கண்டீர்?- ஆம்.

வழ: ஐயன் நின்ற இடத்தை நோக்கித் தான் சூடு விழுந்தது?- ஆம்.

வழ: 'ஐயோ' என்ற சத்தம் கேட்டதும் அப்பக்கத்திலிருந்து தான்?- ஆம்.

வழ ஐயனுக்குத் தான் சூடு விழுந்தது என்று அப்ப நீர் நினைக்கவில்லையா?- இல்லை.

வழ: 2 வெடிச்சத்தம் கேட்டதும் ஐயன் நின்று கொண்டிருந்தார்?- 1-ம் வெடிக்குப் பின் நான் திரும்பிப் பார்க்கவில்லை.

விசாரணை இம்மாதம் 25-ந் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## பொலிசார் மீதான வழக்கு:

# விசாரணையை நிறுத்திவைக்கு சுப்ரீம் கோர்டு உத்தரவு

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் மீதும், 12 பொலிசார் மீதும் மல்லாகம் நீதிமன்றத்தில் திரு. சி. சுந்தரலிங்கம் தாக்கல் செய்த வழக்கு சம்பந்தமான சகல பத்திரங்களையும் அனுப்பி வைக்கும்படியும் விசாரணையை நிறுத்திவைக்குமாறும், சுப்ரீம்கோடு, தந்தி மூலம் மல்லாகம் மாஜிஸ்திரேட்டை கேட்டுள்ளது.

நேற்றுக்காலை இவ்வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அந்தத்தந்தியை மாஜீஸ்திரேட் வாசித்தார். அத்தந்தியில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வழக்காளி தரப்பில் ஆஜரான அட்வகேட் சி, சுந்தரலிங்கம், தமக்கு இது பற்றி சுப்பிறிம் கோர்ட்டிலிருந்தோ, அட்டோர்னி ஜெனரலிடமிருந்தோ எந்தவிதமான அறிவித்தலும் இடைககவில்லை என்று தெரிவித்தார்.

தான் முன்னரே கோர்ட்டில் ஆட்சேபம் தெரிவித்திருந்தும் கூட பிரதிவாதிகளான பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் உத்தியோக உடையில் கோட்டிற்கு வந்திருப்பதாக அட்வகேட் சி, சுந்தரலிங்கம் சுட்டிக் காட்டினுர்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான புறக்டர் எஸ் நடராசா, பிரதிவாதிகள் யாவரும் தங்களது உத்தியோக கடமையில் ஈடுபட்டிருந்த பாதே குற்றம் சாட்டப்பட்டனர் என்று தெரிவித்தார்,

உத்தியோகக் கடமையில் இருந்தாலும், குற்றஞ்சாட்டப்பட்ட பிரதிவாதிகள் கடமையின் எல்லையை மீறி செயல்பட்டிருக்கின்றுர்கள் என்பது தான், வழக்கைத் தாக்கல் செய்தவர்களின் நிலை என்று மாஜிஸ்திரேட் தெரிவித்தார். இதனுல் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்ற முறையில் அவர்கள் மீது விசாரணை நடாத்தக்கூடாதென்பது வழக்குத் தாக்கல் செய்தவர்களின் நிலையாகுமென்றும் மாஜிஸ்திரேட் கூறினுர்

வடபகுதிபொலிஸ் அதிபரும்பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும்நேற்றுகோர்ட்டிற்கு வரவில்லை இவர்கள் மீது வாரண்ட் பிறப்பிக்குமாறு அட்வகேட் சி: சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டார்- இதனை மாஜிஸ்திரேட் நிராகரித்து அடுத்த தவணைக்கான அறிவித்தல் வரும்போது கோர்ட்டில் பிரதிவாதிகளை ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

## லொறிச்சாரதிக்கு 1000 ரூபா பிணை

எழுதுமட்டுவாள், புதன்

"நாளுக்குநாள் சாரதிகளின் கவலையீனம் பல உயிர்களைப்பலி கொண்டு வருகிறது சாரதிகளுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கும் அதிகாரிகள் உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கு முன்பு பல துறைகளிலும் பரிசோதனை நடாத்தவேண்டும்."

அண்மையில் பரந்தன் கண்டி றேட்டில் நடந்த லொறி விபத்து சம்பந்தமாக விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி திரு. ஞானச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினுர்.

லொறியின்கீழ் படுத்திருந்த கிளீனர் அதே லொறியினுல் நெரியுண்டு மாண்டது சம்பந்தமாக நடாத்திய விசாரணையில் லொறியின் சாரதிக்கு மேற்படி லொறியைச் செலுத்துவதற்கு லைசென்ஸ் இல்லையென்பது தெரியவந்தது. அவரை 1000 ரூபா பிணையிலும், லொறியை 5000 ரூபா பிணையிலும் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது.

# இந்திய உதவி கொண்டு பஸ் போக்குவரத்து சீரமைக்கப்படும்

கோட்டை, புதன்

இந்திய அரசு கொடுத்துதவ முன்வந்திருக்கும் உதவிகளைக் கொண்டு பஸ் போக்குவரத்துச் சேவையை நவீன முறையில் மாற்றி அமைப்பதற்கு இ. போ. ச. முடிவுசெயதிருக்கின்றது.

வேறு நாடுகளால் இலகுவில் தருவிக்கச் சாத்தியமில்லாத அலுமினியத்தகடுகள் உட்பட இதர பல்வேறு பஸ் வாகன உதிரிப் பாகங்களையும் தாராளமாகக் கொடுத்துதவ இந்திய அரசு முன்வந்திருக்கின்றது.

இந்த உதவிகளைப் பயன்படுத்தி இப்பொழுது வீதிகளில் ஓட முடியாமல் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள சுமார் 500 பழைய பஸ்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தமுடியுமென்று இ. போ. ச. கருதுகின்றது.

பஸ் உபகரணங்கள் இந்தியாவிலிருந்து கிடைத்ததுடன் அவைகளைப் பயன்படுத்தி பழைய பஸ்களைப் புதுப்பிக்க முடியுமென்று கருதப்படுகின்றது.

இந்த உதவிகளைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு இ போ ச. அதிகாரிகள் குழு ஒன்று விரைவில் இந்தியாவுக்குப் போகவிருக்கின்றது. இந்தப் பேச்சுக்களின் போது எம்மாதிரியான உதவிகள் தேவைப்படுமென்பதை வலியுறுத்தும் வகையில் இந்த அதிகாரிகள் குழு விபரப்பட்டியல் ஒன்றைத் தம்முடன் எடுத்துச்செல்லும் என்று தெரிகின்றது

ஏற்கனவே நாட்டின் பல பாகங்களிலும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பஸ்களினதும் பழுதடைந்து கிடக்கும் பஸ்களினதும் புள்ளி விபரங்களை இ. போ. ச. தலைவர் சேகரித்துள்ளார்

## வீதிப் பாலம் திருத்தும் வேலை

எழுதுமட்டுவாள், புதன்

மறவன்புலோ கலையாபரணன் கோட்டை வீதிபாலம் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பூர்வாங்க வேலைகளை ஏமத்தொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. எம். மகாலிங்கம் கண்காணித்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சி வகுப்பு

கோட்டை, திங்கள்

கஷ்டமான பிரதேச ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு இம்மாதம் 18ம் திகதி தொடக்கம் 21-ந் திகதிவரை விடுமுறை ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பாண் தயாரிப்பு வேலைக்குத் திறமையானவர்களும் மேசை வேலை ஆண்களும் தேவை நேரில் வரவும். ச. மயில்வாகனம், உரிமையாளர், மயிலன் பிஸ்கற் தொழிற்சாலை, வியாபாரி மூலை, பருத்தித்துறை 3057

### விற்பனைக்கு

பட்டதாரி ஆசிரியர்கள், பொலிஸ் கொஸ்தாப்பு/உப பரிசோதகர் பதவிகளுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கும். ஒன்று 50/- சதம். யூனைட்டெட் இன்ஸ்றிடியூட், நெல்லியடி. 3061

சுழிபுரம் தபாற் கந்தோருக்கு அருகாமையில் உமா பவனம் என்னும் பெயருள்ள வீடும் வளவு 4 1/4 பரப்பும் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. வாங்குவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். பொ. முத்துக்குமாரசாமிக்குருக்கள், வள்ளி அம்மன் கோவில், சுழிபுரம். 3051

## வகுப்புகள்

O.L, A.L. விஞ்ஞானம், உயர்தர கணிதம், ஆங்கிலம், சிங்களம், கலைப் பாடங்களில் விசேட விடுதலை வகுப்புகள் நடத்தப் படுகின்றன. விண்ணப்பிக்கவும். எடியுக்கேஷன் ஹோல், 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3054

சித்தி நிச்சயம் பின்வரும் வகுப்புப் பாடங்களுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. காலை/ பகல்/ மாலை/வார இறுதி நாள் வகுப்புக்கள். ஜீ. சி. ஈ. (சாதாரணம்) கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம்/ மனையியல்/ தையல்/ ஜீ. சி. ஈ. (உயர்தரம்) கலை/ விஞ்ஞானம்/ வர்த்தகம். ஜீ. ஏ. கியூ; பி. ஏ. சிறுப்பர் பரீட்சை/ விஷேட ஆங்கிலம் / சிங்களம்/ தமிழ், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், வர்த்தகக் கணக்கியல், வர்த்தகப் புவியியல், உடை தயாரிப்பு, மெசின் பூவேலை, பெயின்ரிங் வகுப்புக்கள் பயிற்சி அனுபவமுடைய பட்டதாரிகளால் நடாத்தப்படும். ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனி விடுதி வசதிகள் உண்டு. எமது பரீட்சை முடிவுகள் சிறப்பானது. யூனைட்டெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி 3044

## அமைச்சர்களை சந்திப்பர்

தாவடி, புதன்

அகில இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தினர், தொழில் மந்திரி கைத்தொழில் மந்திரி ஆகியோரை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு ஒரு தூது கோஷ்டியை அனுப்பியுள்ளனர். திரு சி முதலியாரைத் தலைவராகக் கொண்ட இக் கோஷ்டியில் திருவாளர்கள் ப ஆறுமுகம், க பொன்னையா, க விசுவலிங்கம், க தங்கராசா, செ தம்பிராசா, க விவேகானந்தராசா. ஐ. இரத்தினசிங்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## சாவகச்சேரியில் எழுச்சி தினம்

எழுதுமட்டுவாள், புதன்

இம்மாதம் 16-ம் திகதி தமிழரசுக்கட்சியின் எழுச்சித்தினம் கொண்டாடப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெறும் எழுச்சிதினத்தில் ஊர்வலமும் நடைபெறும். திரு. இராஜதுரை உட்படப் பலர் சொற்பெருக்காற்றுவர்.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

என். எஸ். கிருஷ்ணன் ரி. ஏ. மதுரம் - டெய்ஸி ராணி நடித்த

**67-ல் என்.எஸ்.கிருஷ்ணன்**

(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

அமரர் அண்ணா, தமிழக முதலமைச்சர் மு கருணாநிதி, திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.


பிஸ்கால் இல. 126/69

## பிஸ்கால் கொமிஷன் விற்பனை

இலக்கம் 2089

28/29 ஜூலை 1970

வவுனியா பிரதி பிஸ்கால் ஆபிசில்

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில்

சுப்பையா - பரமகுரு
ஓமந்தை
வழக்காளி
விரோதமாக
பொன்னன் - கணபதி
மருதோடை, ஓமந்தை.

பொன்னன் கைம்பெண் சின்னப்பிள்ளையின் சொத்துக்கு சட்டப்படி நியமிக்கப் பட்டவர்.

எதிராளி

இதன் கீழ் காணப்படும் ஆதனத்தின் மேற்சொல்லிய வழக்கில்,

எதிரிக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும்.

1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் காணியில் பிரசித்த வெந்தீசில் விற்கப் படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அதாவது:-

### ஆதனத்தின் விபரம்

வடமாகாணம் வவுனியா டிஸ்திறிக் வவுனியா தெற்கு கிழக்குமூலை வடக்கு மருதோடை பூரன்வெளியிலுள்ள பூரன்வெளி வேம்படிகமம் என்னும் 3 1/2 புசல் நெல் விதைக்கும் தறை.

இதன் எல்லைகள்-: கிழக்கும் வடக்கும்:- மரிசில் வேலி, மேற்கு:- மருதோடை கந்தசாமி கோவிலின் ஆதனமும் பொன்னன் வீரன் மறுபேருடைய ஆதனமும் தெற்கு:- காக்கையர் புளியங்குளத்தின் கீழ் உள்ள வயல்.

கொமிஷன் தொகை:- ரூபா 812/50 சதம், வட்டி 17-1-64லிருந்து தீர்வைத் திகதி வரை (7-10-65) ரூபா 500/-க்கு 18% அதன் பின் முழுத் தொகைக்கும் கடன் அறவிடும் வரை 5% வட்டி.

கோட்டுச்செலவு:- ரூபா 233/60 சதம். பிஸ்கால் கட்டணமும், பவுண்டேச்சும் அறவிடப்படும்.

ஆ. குணநாயகம்'
மேலதிக பிரதி பிஸ்கால்.
2402

# பரந்தனில் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், வியா.

பரந்தன் ரசாயன விளையாட்டுக் கழகத்தினர், இம்முறை தமது வருடாந்த விளையாட்டுப் போட்டியை மிக விரிவான முறையிலும், சிறப்பாகவும் நடாத்தத் திட்டமிட்டுள்ளனர். இக் கழகத்தினர், 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியொன்றை, வெளிவிளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தி பரிசு வழங்கத் திட்டமிட்டுள்ளனர். இந்த 'நொக்கவுட்' போட்டியில் யாழ்ப்பாணத்திலிருந்தும் பல முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்ற இருப்பதாக, பரந்தன் விளையாட்டுக் கழக உதைபந்தாட்டக் காரியதரிசி திரு. ஏ. பென்னடிற் எமது நிருபரிடம் கூறினர்.

மேற்படி கழகம் தமது வருடாந்த விழாவை முன்னிட்டு கழக அங்கத்தவர்களிடையே நடாத்தி வரும் 'டேபிள் ரெனிஸ்' சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:

கடந்த வருட சாம்பியனை திரு எம் சிவலிங்கத்திக்கும், திரு. கே இராசரத்தினத்துக்குமிடையில் நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில், கே. இராசரத்தினம் 2—1 ஆட்ட வித்தியாசத்தால் வெற்றி பெற்றார்.

திரு வி. சிவஞானம், திரு. கே. இராசரத்தினமும்; திரு எஸ். மகேந்திரன் திரு. எஸ். கே யோகராசா ஆகிய இருவரையும் எதிர்த்து விளையாடிய இரட்டையர் போட்டியில் சிவஞானமும் இராசரத்தினமும் 5—3 ஆட்டத்தால் வெற்றி பெற்றனர்.

(தே. நி)

## உதைபந்தாட்ட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணப் பாடசாலைகளிடையே நடாத்தப்படும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அடுத்த மாதம் 21-ம் திகதி ஆரம்பமாகின்றது. 'இந்தச் சுற்றுப் போட்டியை தாங்கள் மிகவும் குறுகிய காலத்தில் நடாத்தி முடிக்கத் திட்டமிட்டிருப்பதாக' யாழ்ப்பாண பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி, நமது நிருபரிடம் தெரிவித்தார்.

மேற்படிச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் கூடிய போது, பின்வருவோர் புதிய வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஈ சபாலிங்கம், உபதலைவர்கள்: திரு. பி. ஏகாம்பரம், திரு. டி எஸ். குமாரசாமி, காரியதரிசி: திரு. ஆர். துரைசிங்கம், உபகாரியதரிசி: திரு என். சோமசுந்தரம், தனாதிகாரி: திரு. எஸ். ராசதுரை.

(தே. நி)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் 5-ம் ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டியும் இம் மாதம் 16-ம் திகதி இணுவில் [illegible]ந்திய சந்தை மைதானத்[illegible]ல் திரு. செ. இலகுநாதன் தலைமையில் நடைபெறும். (தே. நி)

சனசமூகநிலைய

## 'நொக்கவுட்' உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வியா.

விளையாட்டமைச்சின் அனுசரணையின் கீழ் யாழ்ப்பாண காரியாதிகாரி பிரிவினர் இம்முறை ஒரு 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த 'நொக்கவுட் போட்டியில் சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியனவே பங்கு பற்றலாம், என விளையாட்டமைச்சின் யாழ்ப்பாண உடற்பயிற்சிப் போதனாசிரியர் திரு. என். தேவபாலன் கூறினர்

மேற்படி 'நொக்கவுட்' போட்டி இம்மாத கடைசிப் பகுதியில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது. (தே. நி)

## வெற்றி கிண்ணம் யாருக்கு?

யாழ்ப்பாணம், வியா.

இணுவில் இந்து விளை[illegible]ட்டுக் கழகம் நடாத்திய உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில், முதல் பிரிவில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும், சுன்னாகம் காந்தி ரூபன் சனசமூக நிலைய உதைபந்தா[illegible]

## பணியின் புனிதம் உணரப்பட வேண்டும்

முசலி, புதன்

'அரசாங்க ஊழியர்கள் இலங்கையில் எல்லாப் பாகத்திலும் கடமை புரிந்து கொண்டு வருகின்றார்கள். இவர்கள் இனத்தால், மொழியால், மதத்தால் வேறுபட்டவர்களாக காணப்பட்டாலும், அவர்கள் தாங்கள் புரிய விருக்கும் பணியின் புனிதத்தன்மையை புரிந்து கொள்ளவேண்டும், அப்படி புரிந்து கொண்டால்தான் அவர்களை ஈடுபடுத்தியிருக்கும் தெய்வீகத் தன்மையான பணியின் மகத்துவத்தை அவர்களால் உணர முடியும் எனவே, அரசாங்க உத்தியோகஸ்தராகிய தாங்கள் பணிபுரிபலனை எதிர்பார்க்காமல், இந்நாட்டில் பொருளாதாரம் முன்னேற்றம், பண்பாட்டு வளர்ச்சிக்காக கட்டாயம் பாடுபட வேண்டும்'

இவ்வாறு மன்னார் மாவட்ட மீன்பிடி இலாகா பரிசோதகர் ஜனாப் என். எஸ் எம் கவுத் தனது காரியாலயத்தில் புள்ளிவிபர உத்தியோகஸ்தராகக் கடமையாற்றி, யாழ்ப்பாணம் மீன்பிடி இலாகா கந்தோருக்கு இடம் மாற்றம் செய்யப்பட்ட திரு ஜி பெர்னாண்டோவின் பிரியாவிடையின் போது தெரிவித்தார். இவ் வைபவம் மன்னார் மீன்பிடி இலாகா உத்தியோகஸ்தரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 13—8—70**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்

அ. இ. கூட்டுறவு தினவிழா இறுதிப்போட்டி

## வடபகுதியில் இவர்கள் வெற்றி பெற்றனர்

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினால் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சர்வதேச கூட்டுறவுத்தின விழாவை யொட்டி நடாத்தப் பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

கட்டுரைப்போட்டி சிரேஷ்ட பிரிவு ப பேரின்பராசா வந்தாறுமூலை வித்தியாலயம் செங்கலடி, மஞ்சுளா கந்தையா வேம்படிமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம், பொ கலைச்செல்வி இராமநாதன் கல்லூரி யாழ்ப்பாணம்,

கனிஷ்ட பிரிவில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த க அருட்சோதி முதலாவதுஇடத்தையும், க யசோதராதேவி இரண்டாமிடத்தையும், தா சிவாஜினி மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

பேச்சுப்போட்டி சிரேஷ்ட பிரிவு: சாந்தகுமாரி சோமசுந்தரம் வேம்படிமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம், என் சண்முகலிங்கம் மைலிட்டி ஐ ப சாலை, சீ சிவயோகநாதன் கைதடி.

கனிஷ்டபிரிவு:என் உஷாதேவி அளவெட்டி, க நிர்மலாதேவி கொழும்புத் துறை, சு சபேசன் வலி-கிழக்கு யூனியன், க இரத்தின காந்தி றோ க பாடசாலை நாரந்தனை.

நாடகப் போட்டி இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மடம் ஐ. பண்டக சாலை சங்கானை கிழக்கு ப. நோ. கூ. சங்கம், அத்தியார் இந்துக்கல்லூரி கூட்டுறவுச்சங்கம் நீர்வேலி.

தனிப்பாடல்: சிரேஷ்ட பிரிவு ஆண்கள்: க. செல்வராசா வரணி மகாவித்தியாலயம், வி. ரவிலோசனன் சண்முகானந்த வித்தியாசாலை கரம்பன், வே. சிவயோகலிங்கம் நாவற்குளி மகாவித்தியாலயம்.

கனிஷ்ட பிரிவு ஆண்கள்: தி. சிவகுமார்சோண்டாவில் சைவ வித்தியாசாலை, பொ. ஜெயபாலன் சரஸ்வதிவித்தியாசாலை வேலணை, சீ. சிவயோகநாதன் கைதடி மகாவித்தியாலயம்;

சிரேஷ்டபிரிவு பெண்கள். எஸ். தேவி சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம். கே. வதனி அருணோதயாக் கல்லூரி அளவெட்டி, து. இரஞ்சிதமலர் உசன் மகா வித்தியாலயம்.

கனிஷ்ட பிரிவு பெண்கள். பாடசாலை.

கூட்டுப்பாடல் பெண்கள்: சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, உசன் மகாவித்தியாலயம், கன்னியர்ச திருக்குடும்பமடப் பாடாலை

(அம்பன் நிரு)

## இன்றைய பலன்

ஆடி மாதம் 28-ம் திகதி [13-8-70]

மேஷம்- நண்பர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்புக்கிடைக்கும், குடும்பத்திலும் பிணைப்புகள் பலப்படும். பொதுவாக நல்லதினம்.

ரிஷபம்- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப் படலாம். கருத்தினில்காதல் மோதும். உடல்நலத்தைப் பேணவும்.

மிதுனம்- கற்கண்டுபோல் இனிக்கும் வாழ்க்கை, களஸ்திரவழியின் மூலம் கனதனம் சேரக்கூடும். மகிழ்ச்சியான தினம்.

கடகம்- விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம். இன்று சும்மா இருப்பதே சுகம்.

சிம்மம்- தெய்வபக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். பொதுமக்களின் மதிப்பு கிட்டும். சுமூகநாள்.

கன்னி- தங்கக்குணம் மேலிடும். தக்க மதிப்பும் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். முன்னேற்றமான தினம்.

துலாம்- வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும்.

விருட்சிகம்- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கும் இடமுண்டு. பிரயாணத்தைப் பின்போடுவது விரும்பத்தக்கது.

தனு- ஆத்திரப்படுவதால் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளுவீர்கள். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

மகரம்- பணமுடைதீரும். பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை தென்படும்.

கும்பம்- ஆபத்து மிகவும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ்—ஜெயந்தி
நடித்த

இரு கோடுகள்



வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

2-வது வாரம்
* ராஜும் * புவனேந்திரம்
நடித்த

வெண்சங்கு




இப்பொழுது திரையிடப்படுகிறது!

இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-40 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

துணைவன்

கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V.மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


கால் கட்டணமும், பவுண் டேச்சும் அறவிடப்படும்.

ஆ. குணநாயகம்'
மேலதிக பிரதி பிஸ்கால்.
2402

## இடமாற்றம்

வேலணை, புதன் வேலணை மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் திரு. வொ. நடராசா வேலணை அரசினர் பாடசாலைக்குமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மண்கும்பான் அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ச. கைலாசபிள்ளை, வேலணை ஆத்திசூடி பாடசாலைக்கு தலைமையாசிரியராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Pre-Poya, Poya 4 Shows
ONCE YOU KISS
A STRANGER
(Color)



சில தினங்களுக்கு மட்டும்
வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 2-30 6-30, 10-00
ஷீலா—சத்யன்—மது
நடித்த
செம்மீன்



ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி—பத்மினி
நடித்த
பேசும்தெய்வம்



REGAL JAFFNA
Daily 4-45, 7& 9-45p.m.
Poya, Pre poya 4 Shows
Oliver Reed
Gabriella Licudi
in
THE JOKERS


நாதன் தலைமையில் நடைபெறும். (தே. நி)

## அறிவித்தல்

அரசாங்கத்தின் தீர்மானப்படி தனிப்பட்ட வியாபாரிகளும் தங்களுக்கு வேண்டிய பொருட்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்திலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். ஆகையால் இச்சமாச எல்லைக்குள் இருக்கும் தனிப்பட்ட வியாபாரிகள் தங்கள் பெயர்களை 20-8-70க்குள் இச்சமாசத்தில் பதிவு செய்வதோடு தங்களுக்குத் தேவைப்படும் பொருட்களையும், தொகையையும் எழுத்தில் அறியத்தரவேண்டும்.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் கரும் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்கே இச்சமாசம் முக்கிய பொறுப்பாளியாயிருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

ஆ. கந்தையா,
கௌரவ காரியதரிசி.

புலோலி ப. நோ. கூ. ச. சமாசம்,
பருத்தித்துறை,
11-8-70. 2403

பந்தாட்ட இறுதிப் போட்டியில், முதல் பிரிவில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும், சுன்னுகம் காந்தி ரூபன் சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் இறுதிச் சாம்பியன் போட்டி, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை இணுவில் எச்சாட்டி மைதானத்தில் சுன்னுகம் பொலிஸ் அதிபரின் தலைமையில் நடைபெறும். வெற்றி பெற்ற கோஷ்டிக்கு எஸ். துரை ஞாபகார்த்த 'சலஞ்ஜ்' கிண்ணம் வளங்கப்படும். (தே. நி)

## ஐக்கிய வெற்றி உபசரணைக் கூட்டம்

யாழ்ப்பாணம்: வியா.
இடதுசாரி ஐக்கிய முன்னணி வெற்றி ஞாபகார்த்த உபசரணைக்கூட்டம் சனிக்கிழமை மாலை சங்கானையில் நடைபெறும்.

பட்டினசபை வளவில் நடைபெறும். இக்கூட்டத்துக்கு திரு. அ. சின்னையா தலைமைவகிப்பார். ஆட்சி மன்ற உறுப்பினர்கள் திரு எம் ஸி சுப்பிரமணிம், திரு ஏ தியாகராஜா ஆகியோர்கள் பிரதம அதிதிகளாக கலந்துகொள்வர்.

## "வகுப்புஅறை போன்று மைதானமும் அவசியம்"

கொடிகாமம், செவ்வாய் உசன் இராமநாதன் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வெ. சந்தசாமி தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அதிதியாக வடமாநில வித்தியாதிபதி திரு. சங்கரலிங்கம் கலந்துகொண்டார். வெற்றியீட்டிய வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் திருமதி என். கந்தசாமி பரிசில்களை வழங்கினுர். இப்போட்டியில் நடேசன் இல்லம் முதலாம் இடத்தையும், வைத்திலிங்கம் இல்லாம் இரண்டாம் இடத்தையும் நாவலர் இல்லம் மூன்றும் இடத்தையும்சுவீகரித்துக்கொண்டன.

'பாடசாலைக்கு வகுப்பறை எவ்வளவு முக்கியமோ அதே போல் விளையாட்டு மைதானமும் முக்கியம். இதைஇன்று கண்கூடாகக் காணக்கூடியதாய் உள்ளது' என்று வடமாநிலவித்தியாதிபதிதமதுபேச்சில் தெரிவித்தார்.

ஒரு பாடசாலையில் விளையாட்டுப்போட்டிநடைபெறுவிடின் அதைப் பிரத்தியேக கல்விச்சாலைகளைப் போலவே கருதவேண்டிவரும் எனவும் அவர் கூறினுர்.


## யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!

கடந்த 25 வருடங்களுக்குமேல் உங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, உங்கள் நகைகள் வைரத் தேவைகளை நம்பிக்கையாக செய்து, உங்களின் அன்பையும், அபிமானத்தையும் பெற்றவர்கள், புதியதோர் ஸ்தாபனத்தை நிறுவி உங்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய முன்வந்திருக்கிறுர்கள்.

ஆரம்ப நன்னுளை எதிர்பாருங்கள்!

எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்

நகைகள்—வைர வியாபாரிகள்.
கன்னாதிட்டி, (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.


7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலி பரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-00 முத்திநெறி, 6-30 விவசாயநிகழ்ச்சி, 6-45 வீட்டுடாக்டர், 7-00 சித்திரம், 7-15 இவ்வார அதிதிகள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

எஸ், தேவி சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம், கே. வதனி அருணோதயாக் கல்லூரி அளவெட்டி, து. இரஞ்சிதமலர் உசன் மகா வித்தியாலயம்.

கனிஷ்ட பிரிவு பெண்கள். எஸ் மைதிலி இராமநாதன் கல்லூரி சுன்னுகம், சி. இந்திராணி மந்துவில் அ. மி. த. க. பாடசாலை, பொ. பவளவசனி நாவற்குளி மகாவித்தியா லயம்.

வில்லுப்பாட்டு மட்டுவில் ஐ ப. சாலை நீர்வேலிதெற்கு ப நோ: கூ. சங்கம், கைதடி மேற்கு ப. நோ கூ. சங்கம்.


கூட்டுப் பாடல் ஆண்கள்: கைதடி மகாவித்தியாலயம், வேலணை சரஸ்வதி வித்தியாசாலை, மந்துவில் அ. த. க


மகரம்- பணமுடைதீரும். பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை தென்படும்.

கும்பம்- ஆபத்து மிகவும் உண்டு. அடுத்துக் கெடுப்பவர் அருகிலே இருப்பர். எதையும் ஆராய்ந்து பார்ப்பதே நன்று.

மீனம்- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதை கவருவீர்கள். பயன் தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை



தட்டி விட்டதும் இயங்கும் சுலபமான விசையுடைய பீச்சு முனை கொண்டது.

திறம்படச் சிவிறுவதற்கு உறுதியான புதிய யந்திரம்
ஹேஸ்ப்ரே 225 பிபீ

புதிய ஹேஸ்ப்றே 225 பிபீ சிவிறியிலுள்ள ஈட்டி முனையில் பொருத்தப்பட்டுள்ள, தட்டிவிட்டமாத்திரத்தில் இயங்கும் புதிய தடுப்பு விசை சிறந்த முறையில் பயன்படுகிறது. ஏனெனில் இது, பாய்ச்சப்படும் மருந்தின் அமுக்கத்தைக் குறைந்த அளவிலிருந்து கூடுதலான அளவிற்குக் கட்டுப்படுத்த வசதியளிக்கின்றது. இது, குறிப்பாக, பயிர்களுக்குச் சேதம் ஏற்படுமோ என்ற பயமே இல்லாமல், களைக் கொல்லிகளைத் தெளிக்க உபயோகப்படுகிறது.
துருதடுப்பு பித்தளைத் தாங்கியிலானது. வெளிப்புறத்தில், சதுர அங்குலத்திற்கு 70 ருத்தல் அமுக்கம் தரக்கூடிய பிஸ்டன் உடையது. அத்துடன் இடதுகைப் பிரயோகத்திற்கென அடிப்புறத்தில் இயக்கு விசை ஒன்றும் பொருத்தப்பெற்றது.
ஹேஸ்ப்றே உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.

தயாரிப்போர்:
ஹேலீஸ் லிமிட்
400, டீன்ஸ் ரோட்,
கொழும்பு 10.
தொலைபேசி:
96831

VISION 76/70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காஸியாவுக்கு அருகாமையிலேயே அமைதிப் பேச்சு நடக்கவேண்டுமாம்

## இஸ்ரேல் தெரிவித்துள்ள யோசனை

### நியூயோர்க்கில் நடத்துவதற்கு ஜோர்டான், எகிப்து விருப்பம்

வாஷிங்டன், ஆக. 12
மேற்காஸிய நெருக்கடிகளைத் தீர்த்துக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்காஸியாவுக்கு அருகாமையிலேயே நடைபெற வேண்டும் என்று இஸ்ரேல் விருப்பம் தெரிவித்திருக்கின்றது.

பேச்சுக்கள் நியுயோர்க்கில் நடைபெறுவதையே ஜோர்டான் விரும்புவதாக கருத்து வெளியிட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

இஸ்ரேலுக்குச்சென்றுவிடுமுறையைக் கழித்துவிட்டு வாஷிங்டன் திரும்பியுள்ள இஸ்ரேலிய தூதுவர் பேச்சுவார்த்தைகள் மேற்காஸியாவுக்கு அருகிலேயே இடம் பெறவேண்டுமென இஸ்ரேல் விரும்புவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

மேற்காஸிய அமைதிக்கு அமெரிக்க தெரிவித்த யோசனைகளை நெருக்கடியில் சம்பந்தப்பட்ட நாடுகளில் பலவும் ஏற்றுக்கொண்டுவிட்டதாய் இப்பொழுது சம்பந்தப்பட்ட நாடுகளுக்கிடையில் அமைதிப் பேச்சுக்களை எங்கே ஆரம்பிப்பது என்பது பற்றிய பிரச்னை எழுந்துள்ளது இதுவிஷயமாக ஐ. நா.வின் மேற்காஸிய பிரதிநிதி டாக்டர் குணர் ஜாரிங் விரைவிலேயே சம்பந்தப்பட்ட நாடுகளுடன் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவார் என்று தெரிகின்றது.

#### அல்ஜீரிய படைகள்

சூயஸ்கால்வாயில் முகாமிட்டிருக்கும் அல்ஜீரியபடைகள் தாய்நாடு திரும்பப் போவதாக அறிவித்துள்ளனர். மேற்காஸியாவில் ஐக்கிய அரபுக்குடியரசு கடைப்பிடிக்கும் கொள்கையை அல்ஜீரியா எதிர்ப்பதின் காரணமாக இந்தப்படைகள் திரும்பிச்செல்லவிருப்பம் தெரிவித்துள்ளன. இதை ஐக்கிய அரபுக் குடியரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. இத் தகவலை 'அல்அஹ்ரம்' பத்

திகதி ஐ. நா. சபை நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் இஸ்ரேலை ஐக்கிய அரபுக் குடியரசு அங்கீகரிக்குமென்று அப்பத்திரிகையின் அரசியல் நிருபர் தெரிவித்துள்ளார். இந்த தீர்மானத்தை அமுல் நடத்துவதற்குஇஸ்ரேல்முன் வந்தால் அந்த நாட்டை நாம் அங்கீகரித்தே ஆக வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் இப்பொழுது கடைப்பிடிக்கப்படும் போர்நிறுத்த காலத்தில் எகிப்தியர் பிடித்துவைத்துள்ள இஸ்ரேலியர் எவரையும் விடுக்கப்போவதில்லையென்று தெரிகின்றது. என்ருலும் இருநாடுகளும் மறைமுகமாகவோ நேரடியாகவோ பேச்சுக்களை ஆரம்பிக்கும்போது போர்க்கைதிகளைப் பரிமாறிக்கொள்வதற்கு ஐ. நா. பிரதிநிதி குணர்ஜாரிங்கினுல் ஏற்பாடு செய்யமுடியும் என்று தெரிகின்றது.

அதேசமயம் லெபனுன் எல்லையிலும் ஜோர்டான் எல்லையிலுமிருக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கங்களைச் சேர்ந்த கொமாண்டோக்கள் இஸ்ரேலுடனன அமைதி முயற்சிகள் எதையும் ஆதரிக்கப்போவதில்லையென்று கண்டிப்பாக மறுத்துவடுகிருர்கள்.

## கடத்தியவர்களை விடுவியுங்கள்

### யுதாண்ட் கோரிக்கை

மொன்டிவீடியோ, ஆக. 12
உருகுவே நாட்டில் தீவிரவாதிகள் பிடித்து வைத்திருக்கும் இரண்டு வெளிநாட்டுத் தூதுவர்களையும் விரைவில் விடுதலை செய்யும்படி ஐ. நா. பொதுச்செயலாளர் கொரில்லாக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

ஏற்கனவே கொலை செய்யப்பட்ட அமெரிக்க அதிகாரிகளைத் தவிர ஏனைய இருவரும் உயிருடன் இருப்பதாகவும், அவர்களை விடுவிக்க அரசாங்கம் முயற்சி செய்தால் கொலை செய்யப்படுவார்கள் என்றும் கொரில்லாக்கள் அறிவித்துள்ளனர். அமெரிக்க விவசாய நிபுணர் ஒருவரையும், பிரஸில் நாட்டு கன்சல் ஜெனரலையும் தீவிரவாதிகள் பிடித்துவைத்திருக்கிருர்கள் ஏற்கனவே கொள்ளப்பட்ட அமெரிக்க அதிகாரியின்

## நவீன கண்ணன்

மதுரை, ஆக. 12
பாரதப்போரில் கண்ணன் போல் ராஜாஜி நடந்து கொள்கிருர் என்று தமிழ் நாடு முதல்வர் கருணநிதி கூறினர்.

'அகில இந்திய அளவில் சிண்டிகட் கா கிரசாருடன் கூட்டு சேருவதாக அறிவித்து இருக்கும்ராஜாஜி தமிழ் நாட்டில் தி. மு. கழகத்துடன் உறவு நீடிக்கும் என்று கூறுகிருரே இது எப்படி என்று முதல் அமைச்சர் கருணநிதியிடம் பத்திரிகை நிருபர்கள் கேட்டார்கள்.

அதற்கு கருணநிதி பதிலளிக்கையில் பாரதக் கதையில் துரியோதனனுக்கு ஆயுதங்கள் கொடுத்த கண்ணன் போரில் பாண்டவர்கள் பக்

## "சுயபாஷை ஆசிரியர் போற்றப்படவில்லை"

மாவிட்டபுரம், செவ்வாய்
'கல்வி உலகில் ஆரம்பம் முதல் இளைப்பாறும் வரை தொண்டு செய்பவன் சுயபாஷை ஆசிரியன். சுயபாஷை ஆசிரியனின் தொண்டுக்கேற்ற அந்தஸ்தில் அந்த ஆசிரியன் போற்றப்படுவதில்லை. விசேட ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் சேவை நீடிப்பு வழங்கவிருக்கும் பட்சத்தில் சுயபாஷை ஆசிரியர்கள் மட்டுமே சேவை நீடிப்புப் பெறமுடியாமல் வருந்தத்தக்கதொரு கஷ்டநிலையை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது'.

இவ்வாறு வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை, வலிகிழக்கு தமிழ் ஆசிரியர்சங்க உறுப்பினராகவும், புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய அதிபராகவும்கடமையாற்றி இளைப்பாறிய திரு. சி. கந்தசாமிக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

வலிகிழக்கு தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் ஒவ்வொரு ஆசிரியரும் தமது உரிமையைப் பெற ஏதாவது ஒரு தொழிற் சங்கத்தில் சேர்ந்து உழைக்க முன்வர வேண்டும் என்ருர்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தலைவர் திரு. இ. கந்தையா பேசுகையில் திரு. சி. கந்தசாமியின் சேவை பாடசாலைகளுக்கும் ஆசிரிய சங்கங்களுக்கும் கடந்த காலங்களில் பெரும் பயன் அளித்தன எனச் சொன்னர்.

சுமார் முப்பதாண்டுகளுக்கு மேல் வலிகிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் காரியதரிசியாயும் நிர்வாகியாயுமிருந்து பெருந்தொண்டாற்றியவர் திரு. சி. கந்தசாமி என திரு. இ. குமாரசாமி தமது தலைமையுரையில் கூறினர்.

தலைமையாசிரியர் திரு. க. எார்க்கண்டுவும் பேசினர்.

## முடிக்குரிய காணியில்

### 40 பேர் அத்துமீறிக்குடியேறினர்

மூதூர், புதன்
முடிக்குரிய காணிகளில் அத்துமீறிக் குடியேறியதாக 40 பேர் மேல் திருகோணமலை மாஜிஸ்திரேட்கோர்ட்டில் சமீபத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

திருக்கோணமலை மாஜிஸ்திரேட் திரு. சி. டபிள்யு விக்ரமசேகரா முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வழக்கில் குற்றவாளிகள் சிலர் தங்களுக்கு வசிக்க நிலமற்ற காரணத்திலேயே முடிக்குரிய காணிகளில் குடியேறியததேகத் தெரிவித்தனர். அத்துமீறிக் குடியேறிய மேற்படி 40 பேரும் குற்றவாளிகள் அல்ல எனக்கூறி

## ஈரப்பலாக்காய் ஏற்றுமதி

கோட்டை, புதன்
ஈரப்பலாக்காய்கள் தகரத்தில் அடைத்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன. வர்த்தகஅடிப்படையில் நடைபெற்ற பரிசீலனை வெற்றியளித்துள்ளதால் இவற்றைத் தகரத்தில் அடைக்கும் நடவடிக்கைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

சந்தைப்படுத்தும் திணைக்கள அதிகாரி இது பற்றி தகவல் தருகையில் இருவருடங்கள் வரை ஈரப்பலாக்காய்களை தகரத்தில் அடைத்து வைத்திருக்க முடியுமென்றும் இதற்கு சில நாடுகளில் நல்ல கிராக்கியிருப்பதாகவும் பெருமளவு அந்நிய செலாவணியைச் சம்பாதிக்கலாம் என்றும் சொன்னர்.

## குடிநீர் கிடைக்கும்

வேலணை, புதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவேரி தண்ணீர் பங்கீடு

# மைசூருடன் இனிமேலும் பேச்சுக்கு இடமில்லை

## பிரதமர் தலையீட்டை கோருகிருர் கருணநிதி

சென்னை, ஆக 12
காவேரி தண்ணீர்ப்பங்கீடு சம்பந்தமாக மைசூர் அரசுடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ்நாடு முதல்வர் விரும்பவில்லை.

ஏற்கனவே நடந்த பேச்சுக்களினுல் பயனில்லை. இனிமேல் பேச்சு நடத்துவதினுல் பலன் ஏற்படப் போவதில்லை. எனவே இந்தப்பிரச்னையை நடுவர் தீர்ப்புக்கே விட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

காவேரி நீர் பிரச்னையில் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு கே. எல். ராவ் அழைத்திருக்கிருரே சம்மதிப்பீர்களா என்று நிருபர்கள் முதல்வர் திரு. கருணநிதியிடம் கேட்டனர். அதற்கு அவர் கூறியதாவது

இனி பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை. மீண்டும் மைசூர் அரசாங்கத்திடம் பேசத் தயாராக இல்லை. பேசிப் பயனில்லை. 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சுவரார்த்தை இருக்க வேண்டும் என்பதை மைசூர் அரசாங்கம் ஏற்கவில்லை.

இதில் டெல்லி மந்திரி ராவ் எடுத்துக் கொண்ட மிதமான போக்கு தமிழக அரசும், தமிழ்மக்களும் வருந்தத்தக்கது. இதில் உடனடியாக பிரதமர் தலையிட்டு 'டிரிபூனல்' (கோர்ட்) ஏற்படுத்த வேண்டும்.

காவேரியில் அணைக்கட்டுவதை தடுக்க முடியாது என்பதை டெல்லி அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் மாநில அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் அதனதன்வழிப்படி நடக்க வழி கோலுவதாகும்.

இந்தப் பிரச்னையில் தமிழர்களின் குரல் ஒன்றுபட்டு ஒலிக்க சர்வகட்சி தலைவர்கள் மகாநாடு கூட்டி முடிவு எடுக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் வெளிநாட்டில் இருந்து வந்தபிறகு நடைபெறும்.

## "முதலில் கடமையைச் செய்யுங்கள்"

— கெனமன்

கோட்டை, புதன்
''அமைச்சர்களைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்தலை விடுத்து நீங்கள் இலங்கையில் சிறந்தமுறையில் சோஷலிஸம் உருவாக உங்கள் கடமையை சரியாகவும் திருப்திகரமாகவும் செய்தல் வேண்டும்'

சுதந்திர சதுக்கத்திலுள்ள வீடமைப்பு அமைச்சின் கட்டிடப்பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம்செய்த வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் நாட்டின்முக்கிய பிரச்னைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே யெடுத்துள்ளது. நாட்டின் செல்வம் எங்கு குவிந்திருக்கிறது என்பது அரசாங்கத்துக்குத்தெரியும். அரசாங்கம் அவற்றை தேடி எடுப்பதில் தயங்கமாட்டாது. இதனுல் ஒருசிலர் பாதிக்கப்பட்டாலும்பெரும்பான்மையான மக்கள் நன்மைபெறுவர், இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டிய உரிமைகளை கொடுத்து அவர்களுக்கு உரியஇடத்தை அளிக்கும்.

## 'பெரியபுராணத்துக்கு வித்திட்டவர் சுந்தரர்'

யாழ்ப்பாணம், வியா.
''செந்தமிழ் கைவந்த சுந்

## அல்லைப்பிட்டி ச. ச. நிலையம்

யாழ்ப்பாணம், வியா
அல்லைப்பிட்டி சனசமூக நிலையத்தின் 24-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. செ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- திரு பீ அ அலோசியஸ் உபதலைவர்- நீ சவரிமுத்து, பொதுச்செயலாளர்- த அருணகிரிநாதன். உதவிச்செயலாளர்- வ அருளானந்தம், பொருளாளர்- செ செல்லத்துரை, கலாச்சார செயலாளர்- இ சிவபாதம், விளையாட்டுச் செயலாளர், சே ஆலாலசுந்தரேசன், பொருளாதார ஆலோசகர் நா. சச்சிதானந்தன்.

ஐந்துபேர் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

... ...

## தொலைபேசித் தொடர்பு வேண்டும்

யாழ்ப்பாணம், வியாழன்
சரவணை உபதாபற் கந்தோருக்கு தொலைபேசி வசதிசெய்து தரவேண்டுமென்று ஒரு மகஜரை சரவணை வாசிகள் ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்திடம் கொடுத்துள்ளனர்.

அந்த மகஜரில் சரவணை

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், செய்வாய்
அளவெட்டி பிளுக்கைத் தரவையில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இம்மாதம் 15ம் திகதி நடைபெறும், அளவெட்டி விவசாயக்கழகத்தின் ஆதரவில் நடைபெறும். இது 6வது ஆண்டு மாட்டுவண்டிச் சவாரியாகும். இந்தப் போட்டி நிகழ்ச்சிக்கு அளவெட்டி கிராமமுன்னேற்றச் சங்கத்தலைவர் பண்டிதர் க நாகலிங்கம் தலைமை வகிப்பார். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு சுன்னகம் பொலிஸ் அதிபர் திரு. நவரத்தினராசா போஷகராகயிருந்து வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்கள் வழங்குவார்.

— —

## 'பொதுமக்கள் பெற்றோர் உதவுக'

ஆனைக்கோட்டை, புதன்
'400 பிள்ளைகள் பயில்வதும் 12 ஆசிரியர்கள் பணியாற்றுவதுமான பாடசாலை இரண்டுபரப்புக் காணிக்குள் அடங்கிய சிறுகட்டிடமாகவுள்ளது பொதுமக்களும் பெற்றோரும் விருத்திசெய்ய உதவவேண்டும்.'

இக்கோரிக்கை ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடி ஸ்ரீ பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற பெற்றோர்-ஆசி

அல்ஜீரியா எதிர்ப்பதின் காரணமாக இந்தப்படைகள் திரும்பிச்செல்லவிருப்பம் தெரிவித்துள்ளன. இதை ஐக்கிய அரபுக் குடியரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. இத்தகவலை 'அல்அஹ்ரம்' பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

1967-ம் ஆண்டு 22-ம்

அமெரிக்க விவசாய நிபுணர் ஒருவரையும், பிரானில் நாட்டு ஈன்சல் ஜெனரலையும் தீவிரவாதிகள் பிடித்து வைத்திருக்கிறார்கள் ஏற்கனவே கொள்ளப்பட்ட அமெரிக்க அதிகாரியின் சடலம் அமெரிக்காவுக்கு கொண்டுபோகப் படுகின்றது

ரிகை நிருபர்கள் கேட்டார்கள்.

அதற்கு கருணாநிதி பதிலளிக்கையில் பாரதக் கதையில் துரியோதனனுக்கு ஆயுதங்கள் கொடுத்த கண்ணன் போரில் பாண்டவர்கள் பக்கமே இருந்தார் அதேமாதிரி காமராஜருக்கு ஆயுதம் கொடுக்கும் ராஜாஜி தி மு. கழகத்தின் பக்கமே இருக்கிறார் என்று கூறினார்.

த...ளுக்கு வசிக்க நிலமற்ற காரணத்தினலேயே முடிக்குரிய காணிகளில் குடியேறியததேகத் தெரிவித்தனர். அத்துமீறிக் குடியேறிய மேற்படி 40 பேரும் குற்ற வா...ளிகள் அல்ல எனக்கூறின மாஜிஸ்திரேட் வழக்கை செப்டம்பர் 5-ம் திகதிவரை ஒத்திவைத்து இவர்களை தலா 100 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

செலாவணியைச் ச...ா திக்கலாம் என்றும் சொன்னார்'

## குடிநீர் கிடைக்கும்

வேலணை, ...தன்

வேலணை நாரந்...னைப் பகுதிகளில் வாழும் மக்களுக்குக் குடி தண்ணீர் விநியோகிக்க சமூகசேவைப் பகுதி முடிவுசெய்துள்ளது.

# விஷவாயுவை கடலில் அமுக்குவதற்கு எதிர்ப்பு

நியூயோர்க் ஆக. 12 அத்திலாண்டிக் சமுத்திரத்தில் நாஸகார வாயுக்களை பெரும் தாங்கிகளில் அடைத்து அமுக்கி விடுவதற்கு அமெரிக்கா முடிவு செய்திருப்பதற்கு உலகம் முழுவதும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

பழைய யுத்தக் கப்பல்களில் நாஸகார வாயுக்களை அடைத்து அவைகளை அத்திலாண்டிக் சமுத்திரத்திற்குள் அமுக்கிவிட எடுக்கப்படும் முயற்சியினல் கடல் நீரில் நஞ்சு கலந்து மீன்களுக்கும் மனித உயிர்களுக்கும் ஊறு விளைவிக்கும் என்று பல நாடுகள் எச்சரிக்கை செய்துள்ளன.

சுமார் பதின்மூவாயிரம் தொன் நாசகார வாயுக்கள் இக்கடல் அமுக்கப்படவிருக்கின்றது. ஏற்கனவே இரண்டு ரயில் வண்டிகளில் இந்த வாயு பீப்பாக்களில் அடைத்து வட கரோலினு தீவுநோக்கி அனுப்பப்பட்டுள்ளது

# 3 குழந்தைகளின் தாய் உயிரை மாய்த்தார்

எழுதுமட்டுவாள், புதன்

மூன்று குழந்தைகளின் தாய் கிருமிநாசினியிடம் தஞ்சமடைந்தார்! கணவரின் குடிவெறிக் கூத்தைச் சகித்துக்கொள்ளாமலேயே இவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டதாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

வவனியாப் பகுதியைச் சேர்ந்த பெரியதம்பனை என்ற கிராமத்தைச் சேர்ந்த ஐயாத்துரை மனோன்மணி என்ற பெண்ணே தற்கொலை செய்துகொண்டவராவார். மரண விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

இறந்த மனோன்மணியின் பெற்றோர் கதிர்காமம் சென்றிருந்ததால் சடலம் 5 நாட்கள் அவர்களுக்காகக் காத்துக்கிடந்தது. அவர்கள் வராததால் அழுகிய நிலையில் சடலம் அடக்கம் செய்யப்பட்டது

# கிழக்குமாகாண மீனவருக்கு காப்புறுதித் திட்டம்!

திருமலை, புதன்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்று விரைவில் உருவாக்கப்படவுள்ளது. உதவி அமைச்சர் அப்துல்மஜீத் இத்தகவலை வெளியிட்டார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவர்களின் கஷ்டங்களைத் தீர்க்கும் முகமாகவும், இவர்களுடைய குடும்ப வாழ்க்கை நிலையை உறுதிப்படுத்துமுகமாகவும் இக்காப்புறுதித்திட்டத்தை நிறுவுவதோடு, இத்தனை காலமும்காப்புறுதித்திட்டமின்றி தவித்த மீனவர்களின் கஷ்டம் இனிமேல் போக்கப்படுவதற்காகவும் விரைவில் இத்திட்டத்தை நிறுவும்படி தகவல் ஒலிபரப்பு உதவி மந்திரி ஜனப் அப்துல்,மஜீது மீன்பிடி கூட்டுத்தாபன மந்திரியைக் கேட்டுள்ளார்.

காப்புறுதித் திட்டத்தை உண்டுபண்ணுவதோடு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஏழை மீனவர்களுக்காக, வீடமைப்புத் திட்டம் மின்சார விநியோகத்திட்டம், தண்ணீர் விநியோகத்திட்டம் ஆகிய பல அபிவிருத்தித்திட்டங்கள் உண்டாக்கப்படுமென மஜீது குறிப்பிட்டார்.

# தமிழாராய்ச்சிக்கழகக்கட்டிடம் சென்னையிலேயே அமையும்?

சென்னை, ஒகஸ்ட் 12

உலகத் தமிழாராய்ச்சிக்கழகம் சென்னையில் அமைவதையே தமிழ் நாடு அரசு விரும்புகின்றது.

உலகநாடுகளுடன் தொடர்பு கொள்ள எளிதாகவும் தமிழ்நாடு அரசுக்கு இக்கழகத்தின் மீது சற்று பிடி இருக்க வேண்டுமென்பதாலும் சென்னையில் அது அமைவதே சிறந்தது என்று முதல்வர் திரு. மு. கருணாநிதி கருதுகிறார்.

அண்மையில் திரு. கருணாநிதி மதுரைக்குப் போயிருந்தார் அங்கு நிருபர்கள் தமிழாராய்ச்சிக்கழகம் பற்றிய கேள்விகளைக் கேட்டார்கள் இக்கழகம் மதுரையில் அமையவேண்டுமென்று மதுரை முனிசிப்பல் சபை ஏற்கனவே கேட்டிருந்தது

நிருபர்களிடம் திரு கருணாநிதி தெரிவித்ததாவது:-

இக்கழகத்தை எந்த இடத்தில் அமைப்பது நல்லது என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். வெளிநாடுகளுடன் தொடர்புகொள்வதற்கு ஏற்ற இடத்தில் இருக்கவேண்டும். இந்த வசதிகள் சென்னையிலுள்ளன. இந்த ஆராய்ச்சிக் கழக நிர்வாக அமைப்பில் தமிழக அரசுக்கும் பிடிப்பு இருக்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறோம். இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.

தமிழாராய்ச்சி மட்டும் அல்லாமல் தமிழ் மகாநாடு நடத்துவது ஆராய்ச்சி கிளைகள் அமைப்பது, விஞ்ஞானத்துறை, மருத்துவத் துறைகளில் வளர்ந்துவரும் வேகத்திற்கு ஏற்ப தமிழ்ச் சொற்களை ஏற்படுத்துவது ஆகியவைகளில் இக்கழகம் ஈடுபடும்

நிரு: தமிழ் மொழியில் பிற மொழிச் சொல் கலப்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

பதில்: தமிழை இலக்கியமாகவோ, காவியமாகவோ எழுதும் போது கூடுமானவரை பிறமொழிச் சொற்களைத் தவிர்க்கவேண்டும்விஞ்ஞானம், மருத்துவம் ஆகியவைகளைப் புரியவைப்பதற்குப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதில் தவறில்லை. பிறமொழியில் சில சொற்களை அப்படியே தமிழ் ஆக்கலாம்.

கேள்வி:- மதுரையில் அண்ணு நினைவு நிலையம் அமைக்கப்படுமா?

பதில்:- சென்னையில் அண்ணு வீட்டிலேயே அண்ணு நினைவு நிலையம் அமைக்க உத்தேசம். இன்னும் முடிவாகவில்லை.

கேள்வி:- மதுரை திருமலை நாயக்கர் மகால் கட்டடத்தை என்ன செய்யப்போகிறீர்கள்?

பதில்: பாண்டிய மன்னர்கள், நாயக்க மன்னர்கள், தளவாய்முதலியார்போன்றவர்களின் வரலாறுகள் அடங்கிய கண்காட்சி நிலையம் ஏற்படுத்தலாம்

...—

## 6,41600 ஜாம்ரின்கள் தேங்கிக்கிடக்கின்றன

கோட்டை, புதன்

6,41600 ஜாம்ரின்கள் நாரம்பிட்டியாவிலுள்ள பழவகை ஜாம் பதனிட்டுத் தகரங்களில் அடைக்கும் தொழிற்சாலையில் விற்பனையாகாது வீணுகக் கிடக்கின்றன இதை சமீபத்தில் இத்தொழிற்சாலைக்கு விஜயம் செய்த உள்நாட்டு, வெளிநாட்டு உதவியமைச்சர் திரு பி. ரத்னுயக்கா கண்கூடாகக் கண்டார்.

இந்தத் தேங்கிக் கிடக்கும் ஜாம்ரின்களை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்கள் மூலம் விற்பனை செய்யுமாறு விற்பனை இலாகாவுக்கு உதவியமைச்சர் கூறியுள்ளார்.

## 'நாம் இலங்கையர்'

சங்கானை, புதன்

சண்டிலிப்பாய் மத்திய சனசமூக நிலையத்தில் 'நாம் இலங்கையர் இயக்கம்' என ஓர் இயக்கம் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடிக் கொடுத்தல், கிராம அபிவிருத்திக்கான ஆக்க வேலைகளைப் பலதரப்பட்ட வகையில் செய்தல் சாதி, மத பேதங்களை அகற்றுவதற்கு உழைத்தல் என்பன இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கங்களாயிருக்கும்.

இவ்வியக்கத்தின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் விநோதன், உபதலைவர் சோ. பத்மநாதன், செயலாளர் சு இராசரத்தினம், உபசெயலாளர், சோ குமாரகுலசூரியர், தனதிகாரி கே சந்திரசேகரம்

## நாரந்தனையில் சு. கட்சிக்கிளை

யாழ்ப்பாணம், புதன்

நாரந்தனைக் கிராமசபை பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளை அமைக்கப்பட்டது, பின் வருவோர் மேற்படிக் கிளையின் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் தா. திருஞானசம்பந்தமூர்த்தி, உபதலைவர்கள்: சு. கதிர்த்தம்பி வ. மனுவேற்பிள்ளை. சு. கனகசபை இணைச் செயலாளர்கள்: கு பத்மநாதன், க. முத்துக்குமாரு,

பத்துப்பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

அளிக்கும்.

## 'பெரியபுராணத்துக்கு வித்திட்டவர் சுந்தரர்'

யாழ்ப்பாணம், வியா.

''செந்தமிழ் கைவந்த சுந்தரர் சைவ சமயத்தின் ஒளி விளக்குகளாக மிளிரும் அடியார்களது பெயர்களையும் அவர்கள் செய்த திருத்தொண்டுகளின் அருமை பெருமைகளையும் 'திருத்தொண்டத் தொகை' மூலம் தந்திருக்கின்றார். இத்திருத்தொண்டத் தொகையே சைவ உலகத்தின் சரிதமாகிய பெரியபுராணந்தோன்ற வித்தாக அமைந்துள்ளது.''

இவ்வாறு சித்தன்கேணி கலைநகர் இந்துசமய மன்றத்தினர் நடாத்திய சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை விழாவுக்குத் தலைமை தாங்கிய சைவப்புலவர் திரு நா. க. தங்கரத்தினம் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி விழாவின் பிரதம சொற்பொழிவாளராகக் கலந்துகொண்ட திரு. வே. தம்பையா பேசும்போது 'இறைவனைத் தூதாக அனுப்பிய பெருமை சுந்தரருக்குண்டு. முதலை உண்டபிள்ளையைப் பெற்றுக் கொடுத்ததோடு, செங்கலைப் பொன்னுகப்பெற்றவர் சுந்தரர்' என்று சுந்தரரின் பெருமைகளைப் பற்றிக் கூறினார். மன்றச் செயலாளர் திரு, முருகு. நல்லசேகரம் பிள்ளை நன்றி கூறினார்.

## மட்டக்களப்பில் அகில இலங்கை தமிழ்த்தின விழா

கொழும்பு, புதன்

அகில இலங்கை தமிழ்த் தினவிழா நாளைமுதல் 3 தினங்கள் மட்டக்களப்பில் நடைபெற விருக்கிறது. கல்வி அமைச்சின் ஆதரவில் நடைபெறும் இவ் விழாவில் 46 தமிழ்க்கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொள்வர்.

## சங்காபிஷேகம்

சுழிபுரம், புதன்

வழக்கம்பரை மகாமாரியம்மன் கோவில் சங்காபிஷேகம் வரும் வெள்ளிக்கிழமை 14-ம் திகதி இடம்பெறும். பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும் இரவு மேளக்கச்சேரி இசைக்கச்சேரி ஆகியவையும் விமரிசையாக நடைபெறவிருக்கின்றன. அன்னதானமும் நடைபெறும்.

மென்று ஒரு மகஜரை சரவணை வாசிகள் ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்திடம் கொடுத்துள்ளனர்.

அந்த மகஜரில் சரவணை உபதபாற் கந்தோரின் தரத்தை உயர்த்தவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மாற்றம் இல்லையே

புதுக்குடியிருப்பு, புதன்

''நூறு ஆண்டிற்கு முன்பு வன்னி எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இன்றும் இருக்கிறது. மாற்றம் எதுவும் இங்கு நடைபெறவில்லை.''

இவ்வாறு இரணைப்பாலையில் 8-ம் திகதி வவுனியா ஆட்சிமன்ற உறுப்பினர் எக்ஸ். எம். செல்லத்தம்பு தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது கூறினார்.

அவர் மேலும் பேசும்போது பெரும் வைத்தியசாலை, தபாற்கந்தோர், பாதைகள் யாவும் நூறு ஆண்டிற்கு முன்பு இருந்தவையென்றும் அதன்பிறகு வன்னிப்பகுதியில் எதுவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லையென்றும் கூறினார்.

சூ. வஸ்தியாம்பிள்ளை, கா. தம்பாபிள்ளை, புதுக்குடியிருப்பு கிராம சேவையாளர் திரு. கதிர்காமத்தம்பி. இ. பத்திநாதர் ஆகியோரும் பேசினார்கள்.

## தனிப்பட்ட வங்கிவேண்டும்

கோட்டை, புதன்

பொதுமக்கள் வீடு கட்டுவதற்குத்தேவையான கடன் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு தனிப்பட்டவங்கி ஒன்றை நிறுவவேண்டும். என நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவை அகில இலங்கை மத்தியதர வகுப்பு வீடமைப்புச் சங்கம் கோரியுள்ளது:

## அசம்பாவிதங்களை தடுக்க நடவடிக்கை

எழுதுமட்டுவாள், புதன்

மறவன்புலோவில் தொடர்ந்து நடைபெற்றுவரும் அசம்பாவிதங்களைத் தடுக்க கிராமசபைத் தலைவர் திரு. சடாட்சரம் வடபகுதி பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோரும் விருத்திசெய்ய உதவவேண்டும்.'

இக்கோரிக்கை ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடி ஸ்ரீ பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற பெற்றோர்-ஆசிரியர் கூட்டத்தில் விடுக்கப்பட்டது.

திரு. ரி. எஸ். துரையப்பா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கக்காரியதரிசி பாலசுந்தரம், திரு கதிரேசு ஆகியோர்களும் பேசினர்.

## உதிரிப்பாக உற்பத்தித் தொழிற்சாலை

கோட்டை, புதன்

செக்கோஸ்லவாக்கிய அரசின் உதவியோடு இலங்கையில் மோட்டார் உதிரிப்பாகங்களை உற்பத்திசெய்வதற்கான ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற்கு கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது

இந்தத் தொழிற்சாலை ஜாஎலையில் அமைந்துள்ள கைத்தொழிற் பேட்டையில் நிறுவப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. உதிரிப்பாகங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதால் வருடாவருடம் அதிக பணம் விரயமாவதைத் தடுப்பதற்கே அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

## குரும்பட்டியால் பாலகன்மரணம்

எழுதுமட்டுவாள், புதன்

குரும்பட்டி தலையில் விழுந்தமையால் பாலகன் ஒருவன் மரணமானுன்.

உணுவிலைச்சேர்ந்த எஸ். குமாரசாமி என்பவரின் மகனே மரணமானவர். திடீரென்று தலையில் குரும்பட்டி விழுந்தமையால் அறிவு மயங்கிய பாலகனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். வைத்தியபரிசோதனைக்கு முன்னரே பாலகன் மரணமானர்

## வேலைதடை

எழுதுமட்டுவாள், புதன்

கைதடியில் அமைக்கப்பட்டுவரும் ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டட வேலை கொங்கிறீற் கல் அறுக்கும் இயந்திரக்கோளாறினல் தடைப்பட்டுள்ளது.

உதிரிப்பாகங்களைத் திருத்தம் செய்து இணைப்பதற்காக இயந்திரம் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

என் அன்னை கற்றுத்தந்த ராமநாமமே என் வாழ்வில் பல இன்னல்களைக் கடக்க உதவியாகவிருக்கிறது. — காந்தியடிகள்.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 28-ந் திகதி (13-8-70)


## தமிழ்த் தின விழா

அகிலஇலங்கை தமிழ்த்தினவிழா இன்று மட்டக்களப்பில் ஆரம்பமாகிறது. மூன்று தினங்கள் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்தும் நூற்றுக்கணக்கான தமிழ்மாணவர்கள் கலந்துகொள்கிருர்கள். இந்த விழா எப்போது ஆரம்பிக்கப்பட்டது; யாரால் தொடங்கப்பட்டது என்ற ஆராய்ச்சிக்கு இடம்வைக்காமல் இதை தமிழ்மாணவர்களின் முன்னேற்றத்துக்காகவும் நலனுக்காகவும் பயன்படுத்த முன்வந்த கல்விஅமைச்சரை தமிழ் மாணர்கள் பாராட்டுவர். தமிழ்த்தினவிழா ஆரம்பிக்கப்பட்ட முதல் வருடத்திலேயே முடிவடைந்துவிடுமோவென்ற அச்சம் நீங்கிவிட்டது. ஆனுலும் விழாவுடன் தமிழ் நின்றுவிடக்கூடாது என்பது தமிழ் மாணவர்களினதும் பெற்ருேர்களினதும் விருப்பமுமாகும். இந்த விருப்பம் நிறைவேறுமென்பதற்கு முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் பிறந்த மட்டக்களப்பு மாநிலத்திலே இன்று தமிழ்த்தினவிழா நடைபெறுவது நல்ல அறிகுறியாகும்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்கும் விழாவெடுக்கப்பட்டு வந்தது தேசியமொழிகளான சிங்களத்துக்கும் தமிழுக்கும் உரிய அந்தஸ்து அளிப்பதே இன்றைய கூட்டணி அரசின் கொள்கையாகத் தோன்றுவதால் தமிழ்த்தினவிழா ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்திலிருந்து மேலும் சிறப்படையுமென எதிர்பார்க்க இடமுண்டு.

தமிழ்த்தின விழா தாய்மொழி மூலம் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தையும், தாய்மொழி மூலம் கலை, விஞ்ஞானம் ஆகியவற்றைப் பிள்ளைகளுக்கு சுலபமாக ஊட்டமுடியுமென்பதையும் உணர்த்துவதுடன் தமிழ்மொழி மூலம் தமிழ்ப் பிள்ளைகள் உலகை அறிந்து கொள்ளமுடியும் என்பதையும் உணர்த்தவேண்டுமென்பதே பெற்ருேர் விருப்பமாகும் இதை இன்று ஆரம்பமாகும் தமிழ்த் தின விழா நிறைவேற்றுமென்று எதிர்பார்ப்போம்.

## தமிழ் நிகழ்ச்சி

இலங்கைவானெலி மன்ணிக்கவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிகள் புனரமைப்புச் செய்யப்படும் என்று தகவல் ஒலிபரப்பு உதவி அமைச்சர் ஜனுப் அப்துல் மஜீத் தெரிவித்திருக்கிருர். புரமைப்பு சம்பந்தமாகசிலயோசனைகளையும் அவர் கூறியிருக்கிருர். இலங்கை வானெலியின் தமிழ் நிகழ்ச்சிகள் புனரமைப்பு செய்யப்படவேண்டுமென்பதில் வானெலி நேயர்களுக்கிடையில் அபிப்பிராய பேதமிருக்குமென்று எண்ணத்தோன்றவில்லை. இலங்கை வானெலியில் தமிழ் ... உண்டு. ஆனுலும் தமிழ் நிகழ்சசிகள் பற்றித் தகுந்த ஆலோசனை கூறவும் குற்றம் குறைகளைக் கண்டுபிடித்துத் தெரிவித்து அவற்றைச் சீர்திருத்துவதற்கு தகுந்த உத்தியோகப் பற்றற்ற அதிகாரிகளோ அதிகாரசபையில் தகுந்தவர்களோ நியமிக்கப்பட்டிருந்தால் ஒதுக்கப்பட்ட பணத்தைச் சரியாகச் செலவிடவும், திறமையுள்ள கலைஞர்களைப் பயன்படுத்தவும், நல்ல தரமான நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பத் தேவையான பணத்தை ஒதுக்கவும் ...

# தமிழ்மொழித் தினமும் தமிழ்மொழித்திறன் போட்டிகளும்

(க. கந்தசுவாமி பாடவழிகாட்டித்துறை, கல்விஅமைச்சு)

**அனைத்திலங்கைத் தமிழ்மொழித் தினவிழா இன்று மட்டக்களப்பு நகரமண்டபத்தில் ஆரம்பமாகிறது. 15 ந் திகதிவரை மூன்று தினங்கள் நடைபெறும் இவ்விழாவில் 1.5 பாடசாலைகளிலிருந்து 510 மாணவர்கள் கலந்துகொள்கின்றனர். தமிழ்மொழி, தமிழ்மொழிக்கல்வி ஆகியவற்றுக்காக நடைபெறும் இவ்விழா பற்றிய கட்டுரைகளும் ஆசிசசெய்திகளும் இங்கு தரப்படுகின்றன.]**

இலங்கைக் கல்வி அமைச்சு நடாத்தும் மொழித்தினம் இலங்கையின் வரலாற்றிலே குறிப்பிடத்தக்க ஒன்ருகும். இலங்கையின் கல்வித்துறையில்ஓர் அரியசாதனையாகும். சுதந்திரத்தைப் பெற்றதன் பயனுக இந்நாட்டிலே தேசமொழிகள் பெற்றுள்ள அதியுன்னத சிறப்பை உணர்த்துவதாக இப்பெருவிழா அமைந்துள்ளது. இதுநாட்டு மக்கள் அரசின்மூலம் தம் தேச மொழிகளுக்கு அளிக்கும் பெரும் சிறப்பு எனலாம்.

உலகிலே கல்வித்துறையினதும் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளினதும் வளர்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்பானவை. கல்வி வளர்ச்சி, சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சிகள் கல்வி வளர்ச்சிக்கும் உறுதுணையானவை என்பதை உலக வரலாறு உணர்த்துகின்றது. கடந்த நூற்ருண்டிலும் சமூக, பொருளாதார அரசியல் துறைகளில் உண்டானதுரித வளர்ச்சி கல்வித்துறையிலும் புதிய வளர்ச்சியை உண்டாக்கியது. சமூக பொருளாதாரத் துறைகளினதும், அறிவியல்துறைகளினதும் வளர்ச்சிக்காக அவ்வத்துறை வல்லுநர் புதிய ஆராய்வுகளில் தொடர்ந்து ஈடுபட்டிருத்தல்போன்றுகல்வித்துறை வளர்ச்சிக்காகக் கல்விவல்லுனர்புதிய ஆராய்வுகளில் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர்.

ஏனையதுறைகளிலே காலத்துக்குக்காலம் புதிய வளர்ச்சிகள் உண்டாகி வருவதைப் போன்று கல்வித்துறையிலும் புதிய வளர்ச்சிகள் காலத்துக்குக்காலம் உண்டாகிவருகின்றன. உலகக்கல்வி அறிஞர்கள் இதுவரை அளித்துள்ள புதிய கல்விக் கொள்கைகளின் பேருகப் பாடசாலைக் கல்விப்பாடங்களிலும் அவைகளின் போதனைமுறைகளிலும் பெரும்மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. துரிதமான சுதந்திரக்கருத்துணர்வு கல்வியின் இன்றியமையாமையை மேலும் அதிகரித்துள்ளது.

கல்வி நாட்டின் வளர்ச்சிக்கு மூலக்கரு எனவும், ஒருநாட்டின்கல்வி அந்நாட்டின் சமூக, அரசியல் பொருளாதார நலன்களுக்கு உறுதுணையாக இருத்தல் வேண்டுமெனவும், தாய்மொழிமூலம் கல்வி நிகழவேண்டுமெனவும் உலகக் கல்வி அறிஞர்கள் ஏற்றுள்ளனர். கல்வியை நாட்டுமக்கள் அனைவரும் எளிதாகவும் துரிதமாகவும் பெறுதற்காகவும், கல்வியின் முழுப்பயனை நாடு முற்ருகப் பெறுவதற்காகவும் புதிய முறைகளை அவர்கள் தந்துள்ளனர். இவைகளுள் இணைப்பாடவிதான முறைமிக்க பயன் தரும் சிறந்தமுறையாகும்.

இணைப்பாடவிதானத் திட்டம் பாடசாலைக்கல்வித்திட்டத்தின் ஒருபகுதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது இது வகுப்புப் பாடவிடயங்களோடு தொடர்புடையதும். வகுப்புப்பாடநேரத்துக்கு வேருக மேலதிகமாகப்பாடசாலையில் நிகழ்வதுமாகும். இதனுல் மாணவரதுஆற்றல் சுயமாகத் தொழிற்படும். வகுப்பிலேபெற்ற அறிவைப் பிரயோகிப்பதற்கும் வாழ்க்கைக்குப் பயன்தருவகையில் பயன்படுத்துதற்கும் உரிய பயிற்சியை மாணவர் பெறுகின்றனர் இதனுல் இத்திட்டம் எல்லா நாடுகளிலும் செயற்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு பாடத்திற்கும் இணைப்பாடவிதான முயற்சிகள் இருக்கின்றன. ஒருநாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் ... ளுக்கும், பல்வேறு பாடங்களின் போதனைகளுக்கும் அந்நாட்டின் மொழி முக்கிய சாதனமாக இருத்தலால். அவ்வவ்நாட்டுமொழிவளர்ச்சியில் ஒவ்வொரு நாடும் அதிக கருத்துக்கொண்டுள்ளது. மொழித்திறன்வளர்ச்சிக்கு மொழிப்பாடத்திற்குரிய இணைப்பாடவிதான முயற்சிகள் இன்றியமையாதனவாம்.

ஆகவே இலங்கைக் கல்வி அமைச்சு இலங்கைப் பாடசாலைகளிலே இணைப்பாடவிதான முயற்சிகளை நடைமுறைப்படுத்துகிறது. மொழிப்பாடத்திற்கான இணைப்பாடவிதான முயற்சிகள் பலவற்றுள் 'மொழித்தினம்', 'மொழித்திறன் போட்டிகள்' என்பன முக்கியமானவை. பல்வேறு பாடங்களுக்கு இணைப்பாடவிதான முயற்சிகள் பாடசாலைகளிலே நிகழவேண்டுமென்பதற்காகவும், இந்நாட்டுமொழிகளின்மொழித்திறனை மிகமுக்கியமாகவளர்க்கவேண்டுமென்பதற்காகவும் மொழித்தினத்தையும் மொழித்திறன் போட்டுகளையும் கல்வி அமைச்சுநேர்முகமாகத்தானே பாடசாலைகளில் நடாத்துகிறது.

இவை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெவ்வேருக நடைபெறுகின்றன. இவை இப்போதுதனிப்பட்ட வகுப்புகளிலே கல்வி பயிலும் மாணவர்க[ளி]ன் மொழித்திறன் வளர்ச்சிக்காக 'ஆரம்ப கல்விக்கிளையி[னா]ல் ஒழுங்குசெய்யப்பெற்றிருக்கின்றன. மொழித்திறன் போட்டிகள் மொழித்தினத்தின் ஒரு பகுதியாகவே நடைபெறுகின்றன மூன்று முதல் ஏழாம் வகுப்புவரையுள்ள மாணவர்களே இப்போட்டிகளிலே பங்குபற்றுவர். வகுப்பும் வயதும் நோக்கி மூன்றுபிரிவுகளாக இவர்கள் பங்குபற்றுவர். பொதுவாக உருப்பெழுத்து, எழுத்துக்கூட்டல், கட்டுரை எழுதுதல், சொற்பொழிவு, பா ஓதல் நாடகம் ஆகியவற்றிலே போட்டிகள் நடைபெறுகின்றன.

முதலில் இவை பாடசாலைகளிலே நிகழும் பாடசாலைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் கல்வி வட்டாரப்போட்டிகளிலே பங்குபற்றுவர். வட்டாரப் போட்டிகளிலே முதலிடம் பெற்ற மாணவர்கள் மாவட்டப் போட்டிகளிலே பங்குபற்றுவர். மாவட்டப்போட்டிகளிலே முதலிடம் பெற்ற மாணவர் அனைத்திலங்கைப் போட்டிகளிலே பங்குபற்றுவர். பாடசாலைகளிலே சித்திரை மாதத்தில் ஆரம்பமாகி, ஆவணிமாதத்தில் அனைத்திலங்கை நிலையில் நிறைவேறுகிறது. வட்டாரக்கல்வி உத்தியோகத்தர்களும்பிரதேசமாவட்டக்கல்வி அதிகாரிகளும் இவைகளுக்குப் பொறுப்பாக விளங்குகின்றனர்.

ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு விடயத்திலும்முதலிடங்களைப் பெறுவோருக்கு கல்வி மா அதிபதியினது நற்சான்றிதழ்களும், பரிசில்களும்வழங்கப்படுகின்றன. இப்போட்டிக்குரிய பொருள்கள் அவ்வவ்வகுப்பு மொழிப் பாடநூல்களோடு தொடர்புள்ளவை. போட்டிகளுக்கு ஆயத்தம் செய்வதில் மாணவர்க்கும் அவர்களை வழிப்படுத்துவதில் ஆசிரியர்களுக்கும் எளிதாக இருத்தற்காகவே இவ்வாறு ஒழுங்கு செய்யப்பெற்றது. அன்றியும் நாளாந்தம் மொழிப் பாட விடயங்களைக் கருத்துடன் மாணவர் கற்கவும் ஆசிரியர் கற்பிக்கவும் இது உதவுகின்றது.

இப்போட்டிகளினுல் மாணவர்களது ஆற்றல் வளர்கிறது. கற்பதில் மாணவர்க்கும் கற்பிப்பதில் ஆசிரியர்களுக்கும் ஆர்வம் உண்டாகும். இப்போட்டிகளின் போது தம் மாணவரது ஆற்றலைக் காணும்போது அவர்களுக்குக் கல்வியை ஊட்டிய ஆசிரியர்களும் கல்விக்கு ஆவன செய்த பெற்ருேரும் பெருமகிழ்வு எய்துவர். இதனுலே புதிய ஊக்கமும் எழுச்சியும் நாட்டிலே உண்டாகும்.

தமிழ் மொழித்தினம் கடந்த ஆண்டிலே யாழ்ப்பாணத்திலே சிறப்பாக நடைபெற்றது. கல்வி அறிஞர் பலர் நடுவர்களாகக் கடமையாற்றினர். பரிசில்கள் இலங்கை முழுவதிலும் பரவலாகக் கிடைத்தமை மிக மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

கல்வி, மொழிவிழாக்களும் போட்டிகளும் பல்வேறு இடங்களில் இதுவரை பிரதேச, சமூக வகைகளாகவே நடைபெற்றுள்ளன. அனைத்திலங்கை வகையாக அரச ஆதரவுடன்பாடசாலைகளின் மூலம் தமிழ் மொழித்தின விழாவும் மொழித்திறன் போட்டிகளும் நடைபெறுவது பெருமகிழ்ச்சிக்குரியதும் வரலாற்றுச் சிறப்புடைய நிகழ்ச்சியுமாகும்.

# மாணவர் திறமை

எஸ். தணிகாசலப், கல்வி அதிபதி, கல்வி அமைச்சு, கொழும்பு

நமது கல்வி நிலையங்களிலே பயில வரும் மாணவர் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொருவகையிலே ஒவ்வொரு தனித்திறமை யாவது இருக்கும். அந்தந்தத் திறமை மங்கி மறைந்து போகாமல் வளர்ந்து பயன்தருவதற்குப் பெற்ருர், ஆசிரியர் ஆகிய இரு பாலாருமன்றி கல்வி அமைச்சும் பேருக்கமளித்து வழிப்படுத்தி வருகின்றது. இதன் பெறுபேற்றை இன்று நிகழுந் தமிழ்தின விழாவிலே நேர்முகமாக நாம் அறிந்து களிக்கலாம்

தமிழ் மொழியும் அம்மொழி பேசும் மக்கள் அடையத்தக்க பெரும் பயன்களும் அபிவிருத்தியடையவேண்டுமானுல், அத்தமிழ் மொழியிலே தனுத்திறமை பெறுதற்குத் தகுதியுடையராய் விளங்கும் மாணவர்களது முதன்மையூக்கத்தைத் தூண்டி, அவர்களது திறமையை வெளிப்படுத்துதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டியது நமது தலையாய கடமையாகும்.

இந்நற்கடமையை நாம் பரிபூரணமாக நிறைவேற்றுதற்கு, நமது ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்ருேரும் நம்முடன் சேர்ந்து, தமது அபிமானமிக்க ஒத்துழைப்பை நல்குவார்களாக.

## பண்டிதமணி ஆசி

முத்தமிழ் வித்தகரான விபுலானந்தசுவாமிபிறந்த மட்டக்களப்புத் திருநாட் ...

## புனரமைப்பு

யாழ்ப்பாணம், வியா

இலங்கை தபால் தந்திப் பொறியியலாளர் சங்க யாழ். கிளை புனரமைப்புச் செய்யப்பட்டது. தாய்ச்சங் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைப்பு செய்யப்பட வேண்டுமென்பதில் வானொலி நேயர்களுக்கிடையில் அபிப்பிராய பேதமிருக்குமென்று எண்ணத்தோன்றவில்லை. இலங்கை வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகள் ரசிக்கக்கூடியதாகஇல்லையென்ற குறை இன்று நேற்றல்ல பல வருடங்களுக்கு முன்னரே எழுந்ததொன்றாகும். அதிகாரிகள், அறிவிப்பாளர்கள் பலர் இங்கிலாந்துக்கும் இதர பல நாடுகளுக்கும் பயிற்சிபெற அனுப்பப்பட்டு வந்தபோதிலும் நிகழ்ச்சிகளின் தரம் உயர்ந்ததாகத் தெரியவில்லை

இதற்காகதமிழ்நிகழ்ச்சி அதிகாரிகளையும் அறிவிப்பாளர்களையும் ஊழியர்களையும் மட்டும் முற்று முழுதாகக் குற்றமோ குறையோ சொல்லிவிட முடியாது.

தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் போதிய பணம் ஒதுக்கப்படுவதில்லையென்பது பகிரங்க இரகசியம். ஒதுக்கப்படும் பணத்தில்கூட மிச்சம்பிடித்துக் காட்டப்படுகிறதென்ற குறையும் யாகச் செலவிடவும், திறமையுள்ள கலைஞர்களைப் பயன்படுத்தவும், நல்ல தரமான நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பத் தேவையான பணத்தை ஒதுக்கவும் வாய்ப்பேற்படுத்தியிருக்க முடியும்.

இன்றும் கூட மறு ஒலிபரப்புக்களை நிறுத்திவைத்தும், அநாவசியமான 'டப்பா' சங்கீதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தும், வேண்டியவர், வேண்டாதவர் என்ற விருப்புவெறுப்புக்கு இடமில்லாமல் தகுதியான கலைஞர்களுக்கு இடமளித்தும் நல்ல தரமான நிகழ்ச்சிகளை அளிக்கவும், சிங்கள, தமிழ்க் கலைஞர்களை இனமதபேதமின்றி நாட்டுமக்கள் அனைவரும் அறிந்து ரசிக்கவும் போற்றவும் இந்தியாவிலுள்ளது போன்று அகிலஇலங்கை சங்கீத நாடக நிகழ்ச்சிகளை அளிக்கச்செய்வது கடினமல்ல

நல்ல ஆலோசகர்களும் நல்ல ரசிகர்களும்தான் இன்று தேவை,

ஏற்பட்டு வருகின்றது. துரிதமான சுதந்திரக்கருத்துணர்வு கல்வியின் இன்றியமையாமையை மேலும் அதிகரித்துள்ளது.

...குமணைப்பாட விதான முயற்சிகள் இருக்கின்றன. ஒருநாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் கருமங்க...

பயிலும் மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சிக்காக 'ஆரம்ப கல்விக்கிளையினால் ஒழுங்குசெய்யப்பெற

வொரு விடயத்திலும்முதலிடங்களைப் பெறுவோருக்கு கல்வி மா அதிபதியினது நற்சான்றிதழ்களும், பரிசில்க

# தமிழின் தனித்தியங்கும் ஆற்றலை வெளிப்படுத்துவோம்

(புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை)

நமது கன்னித் தமிழ்மொழியின் வரலாறு, உலகின் வரலாறு போல் மிகவும் பழைமையுடையது அதன்புகழ் இறைவன் புகழ் போல் மிகவும் நீண்டது. அதன் பொருள் கற்போரின் உள்ளக்கருத்தின் அளவாக உயர்ந்து வளர்ந்து விரிந்து பரந்தது.

சாதி-மதம்-காலம்-தேசம் கடந்து நின்ற பொதுச் செல்வமாகிய நமது தமிழ்மொழி மன்னர் வளர்த்த மொழி. மாநிலம் ஆண்டமொழி, பன்மொழி வாணர்கள் பாவித்துக் காத்த மொழி. நாம்உண்ணும் உணவிலும் பருகும் நீரிலும் நமது உயிரிலும் நமக்கு இனியமொழி. நமது கண்ணிலும் சிறந்த மொழி.

இந்து சமுத்திரத்தின் எல்லையளந்த நமது தமிழ் மொழியை, இமயம்வரை சென்று வெற்றியீட்டிய நமது வீரமொழியை, சிந்துவெளியில் மங்காத சிறப்புடன் வாழ்ந்த நமது செம்மொழியை, தெய்வத் திருமொழியை, நம் அன்னைமொழியை ஆண்டு தோறும் மதித்து விழாவெடுக்க முன்வந்துள்ள நம் நாட்டுக் கல்வி அமைச்சுக்கு நமது நன்றியும் பாராட்டும் உரியனவாகுக.

தென்மதுரையிலும், வடமதுரையிலும், கபாடபுரத்திலும், நமது ஈழமணித்திருநாட்டிலும் சங்கமிருந்து ஆராய்ந்த தமிழ்மொழியை உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் மணித்தவிசேற்றி அணிசெய்து போற்றி வளர்ப்பதற்குப் பன்மொழிப் புலவர்கள் முன்வந்திருப்பது நமக்குப் பெருமை தருகின்றது. இது வீண் பெருமையன்று என்பதை நாமும் உலகறியச் செய்தல் வேண்டும் என நம்மைத் தூண்டுவதுபோல் அமைந்துள்ளது நம் நாட்டுக் கல்வி அமைச்சின் தமிழார்வம்.

இந்த விசாலமான சூழ்நிலைக்கேற்ப ஈழத் தமிழினமும் பல துறைகளில் ஆக்கப் பணிபுரிந்து நமது தமிழ் மொழியின் தனித்து இயங்கும் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும், விஞ்ஞானத்தில் விருத்தியடைந்த உலக மொழிகளின் மத்தியிலே தமிழ்த்தாய் தலைநிமிர்ந்து நிற்பதை நாம் இந்த விஞ்ஞான யுகத்திலே கண்டு மகிழ வேண்டும்.

சூழ்நிலைக்கேற்ற கல்வி, நாட்டின் இயல்புக்கேற்ற தொழிற்பாடு, தாய்மொழியிற் சுயமாகவே சிந்திக்கும் பழக்கம், கட்டற்ற சிந்தனை விருத்தி முதலிய திறமைகள் மாணவர்களிடம் உருப்பெறும்போது அவைகள் யாவும்தேசியமயமாக மிளிர வேண்டும்.

சூழ்நிலையைப் பயன்படுத்த முடியாத கல்வி, நாட்டின் இயல்பினைப் பிரதிபலிக்க உதவாத கல்வி, தன்னாட்டை மறந்து பிற நாடுகளை நோக்கச் செய்கின்ற கல்வி உதவாத கல்வியாகும் இது சுதந்திரப் பாதையிலே நிறைவு பெறும் இலக்கிற்கு ஒரு நாட்டையும் அதன் தேசிய இனத்தையும் இட்டுச் செல்லாது.

இந்த நிலைமைகளை யெல்லாம் சீர்தூக்கி இலங்கைக் கல்வி அமைச்சு, ஆண்டுதோறும் கொண்டாடுகின்ற தமிழ்த்திறன் விழா நாளில் ஆசிரியரும், மாணவரும், பெற்றார், சமூகமும் கல்விப் பாதையைச் செப்பஞ் செய்துகொண்டு புது நடைபோட்டுச் செல்ல வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். வாழ்க தமிழ்த்தினம், வாழ்கதமிழ். தேசிய ஒற்றுமை ஒளியிலே தமிழ் பேசுமினம் மலர்ச்சியடைக.

## 'சீதன முறையை ஒழிக்க சட்டம் வேண்டும்'

யாழ்ப்பாணம், வியா

சீதன முறையை ஒழிக்கசட்டம் கொண்டுவர வேண்டும் என். றுஜனநாயக சோஷலிச அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்றை யாழ்ப்பாண மாநகர சபையில் கொண்டுவர திரு வி, சிவசுப்பிரமணியம் முன்னறிவித்தல்கொடுத்துள்ளார்.

இம்மாதம் 19-ம் தேதி நடைபெறவிருக்கும் யாழ் மாநகரசபையில் திரு சிவசுப்பிரமணியம் கொண்டுவரும் பிரேரணை வருமாறு-

இலங்கைக்கு மட்டும் மிகவும் பிரத்தியேகமான இவ் வடுவடுப்பான முறையினால் திருமணம் புரியாதும் கன்னியாக இறக்க நேரிடும், ஆயிரக்கணக்கான இலங்காபுரிப் பெண்கள் மீதுள்ள சிறந்த அபிமானம் காரணமாக சீதன முறை தடை செய்யப்பட வேண்டுமென்பது மட்டுமல்லாது அது சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகவும் ஆக்கப்படல்வேண்டும். இதன் பிரதி ஒன்றுபிரதம மந்திரிக்கு அனுப்பப்படல் வேண்டும்,

திரு எஸ், ஜே, அன்ரனி கீழ்க்காணும் பிரேரணையை கொண்டுவருவார்; சோஷலிச ஜனநாயக அமைப்புள்ள ஒரு சுயாதிபத்தியம்வாய்ந்த சுதந்திர நாடாக இலங்கை பிரகடனம் செய்யப்படவிருக்கும் இவ் வேளையில் சிறுபான்மைத்தமிழ்மக்களும் வறுமை நோய் அறியாமை: அச்சம் ஆகியவற்றிலிருந்து சம்பூர்ண விடுதலை பெறக்கூடியதாக சுதந்திரம் நீதி சமத்துவம் சகோதரத்துவம் நிறைந்ததும் அடிப்படை பிறப்பு உரிமைகளைப் பாதுகாக்கக் கூடியதுமான ஒரு ஷரத்தைபுதிய அரசியலமைப்பு திட்டத்தில் இணைத்துக் கொள்ளும்படி பிரதமரையும் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்வதென இம் மன்றம் தீர்மானிக்கிறது.

# செய்திச் சுருக்கம்

### பிரதமர் ஸாம்பியா செல்வார்

ஸாம்பியாவில் உள்ள லுசாக்கா நகரில் செப்டம்பர் 8, 9, 10-ம் திகதிகளில் கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மகாநாடு கூட இருக்கிறது. இம்மகாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஒரு கோஷ்டி செல்லவிருக்கிறது வெளிநாட்டு அமைச்சர்கள் மகாநாடு செப்டம்பர் 6, 7-ம் திகதிகளில் இதே நகரில் நடைபெறும்.

0 0 0

### காலமானார்

முன்னைநாள் செனட் தலைவராக இருந்த திரு. சி. விஜயசிங்க கடந்த திங்கட்கிழமை காலமாகிவிட்டார். இவர் 1947-ல் செனட்சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார், பின்னர் 1952ல் அக்குரஸ்ஸதொகுதி எம் பியாகத் தெரிவுசெய்யப்பட்டார். திரும்பவும் 1656ல் செனட்சபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1959 முதல் 1960 வரை தேசியசேவைகள் அமைச்சராகப் பதவி வகித்தார்.

### பெரஹராவில் பிரதமர்

கண்டி எஸால பெரஹராவில் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா, வர்த்தக அமைச்சர்திரு ரி பி இலங்கரத்ன, காணி விவசாய அமைச்சர் திரு கொப்பேகடுவ ஆகியோர் கலந்து கொண்டனர். திருமதி பண்டாரநாயகாவின் பெயரில் 3 விசேஷ பூசைகள் நடைபெற்றன இவர் புனித தந்தத்திற்கு அண்மையில் சென்று வழிபாடு செய்தார்.

0 0 0

### புதிய சுற்றுநிருபம

1971-ம் ஆண்டுக்குரிய மாணவர்களைத் தெரிவு செய்யும் முறைபற்றியசுற்றுநிருபம் ஒன்றை கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு பி பி உடுகம எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பியுள்ளார்.

0 0 0

### இ. போ. சபை

இலங்கை போக்குவரத்து சபை 1800 கொண்டக்டர்களை நியமிக்க உள்ளது பஸ் சாரதிகளும் போதியளவு இல்லாமையால் அந்த ஸ்தானத்துக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுக்க சபை உத்தேசித்துள்ளது.

## கடன் பெற புதிய வழி

கோட்டை, புதன்

தொழிற்சங்கங்கள், மக்கள் குழுக்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன விரைவில் மக்கள் வங்கியில் கடன் பெறுவதற்கு உத்தரவாதமளிக்கக் கூடியனவாக அமையும். இதற்கான ஒழுங்குகளை மக்கள் வங்கி செய்யவிருக்கிறது

ஐக்கிய முன்னணி அரசு இது பற்றி அது முன்னர் எதிர்கட்சியில் இருக்கும் பொழுதே எடுத்துக்கூறியுள்ளது. எனவும் அதை இப்பொழுது நடைமுறையில் கொண்டுவரவுள்ளது. எனவும் மக்கள்வங்கி அதிபர் திரு. ஹெக்டர் அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

## அமைச்சரின் ஆசிச் செய்தி

நமது நாட்டின் வருங்கால வளர்ச்சி நமதுமாணவர்பெறும் கல்வியிலேயே தங்கியிருக்கின்றது. இதனாலேயே கல்வியைப்பலதுறைகளிலும்வளர்க்க நமது அரசாங்கம் கருத்துக்கொண்டுள்ளது- ஆரம்ப கனிட்ட வகுப்புக்களிலே மாணவர்களது தாய் மொழி அறிவை வளம்படுத்துவதற்காக அனைத்திலங்கை மொழித்தினங்களைக் கல்வி அமைச்சு ஒழுங்கு செய்திருக்கின்றது' இவ்வாண்டு சிங்கள மொழித்தினம் கொழும்பிலும் தமிழ் மொழித் தினம் மட்டக்களப்பிலும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்விழா மொழித்திறன் பயிற்சித் திட்டத்தின் உச்ச நிலையாகும்' நாட்டின் மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் சகல மக்களதும் உரிமைகளைப் போற்றுவதும் நமல் அரசாங்கத்தின் கொள்கையாகும். ஆகவே தமிழ் மொழித்தினவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு எமது நல்வாழ்த்துகள் உரியதாகுக

## குருபூசை

சுழிபுரம், புதன்

வட்டுக்கிழக்கு சித்தன் கேணி மாதர் சங்க திருமுறைக் கழகத்தினர் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை விமரிசையாக கொண்டாடினர். கழக மாணவிகளின் கூட்டுப்பிரார்த்தனை சொற்பொழிவு பூசை ஆகிய சிறப்புநிகழ்ச்சிகள் நடைபெற்றன சிறப்புச் சொற்பொழிவாளராக பண்டிதர் த. சுப்பிரமணியம் கலந்து கொண்டு உரையாற்றினார்.

## பண்டிதமணி ஆசி

முத்தமிழ் வித்தகரான விபுலானந்தசுவாமிபிறந்த மட்டக்களப்புத் திருநாட்டில் இந்த ஆண்டுத்தமிழ்த் தினவிழா நிகழவிருப்பதையிட்டு மகிழ்கின்றோம். மட்டக்களப்பு மீன்பாடும் தேன்நாடு கவிதைவளம் இயற்கையில் அமைந்த நாடு மட்டக்களப்பு.

தமிழ் தமிழ் மாணவர்களுக்குப் பலதிறத்திற் பயன்படுமுறையில் தமிழ் தினவிழா இனிது நடைபெறுவதாக, புதிய அமைச்சின்கீழ் புதுமையுறுவதாக.

அம்மைமுதலிய எண் வகை வனப்புக்களில் விருந்து ஒன்று. விருந்து— புதுமை.

சி, கணபதிப்பிள்ளை

## "வெங்காய விலையை உயர்த்துக!'

''வெங்காயத்தின் உத்தரவாதவிலையை கூட்டவேண்டும் அத்தோடு தனியார் வெங்காயத்தைவெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்குரிய தடையை நீக்க வேண்டும்.

இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்று வடபகுதி விவசாய கூட்டுறவு உற்பத்தியாளர் சங்க சமாசத்தின் 25-வது வருடாந்த பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சமாசத் தலைவர் திரு. நா. த. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சமாசத்தில் அங்கம் வகிக்கும் 149 சங்கங்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் வந்திருந்தனர்,

சமாசத் தலைவர் திரு: சிவஞானம் தொடர்ந்து பேசியதாவது:

வடபகுதி வாழ் மக்களின் விவசாய உற்பத்தி பொருட்களில் சின்னவெங்காயம் முக்கிய பொருளாகும். உற்பத்தி பெருகவும், விவசாயிகள் உற்சாகம் பெறவும் உற்பத்திப் பொருட்களின் விலை உயர்த்தப்படவேண்டும்.

## ஆண்டு நிறைவும் சைவமாநாடும்

கரவெட்டி, புதன்

கப்புதூ அந்தணத்திடல் இந்துமாமன்றத்தின் 3-வது ஆண்டு நிறைவுவிழாவும் சைவ மகாநாடும் இம்மாதம் 15-ம் 16-ம் திகதிகளில் கப்புதூ சைவ வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது:

இம் மகாநாட்டை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தொடக்கி வைப்பார்.

யாழ்ப்பாணம், வியா

இலங்கை தபால் தந்திப் பொறியியலாளர் சங்க யாழ். கிளை புனரமைப்புச் செய்யப்பட்டது. தாய்ச்சங்கத்தின் பிரதமசெயலாளர் திரு. டபிள்யூ. எம். பிரேமச்சந்திரா தலைமையில் இவ்வைபவம் நடந்தது. ஊழியர்களிடையே பரஸ்பரம் ஒற்றுமை நிலவவேண்டியதன் அவசியம் பற்றி திரு. பிரேமச்சந்திரா வலியுறுத்திப் பேசினார்

சங்கத்தின் புதிய உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:-

தலைவர் திரு. பொ பஞ்சாட்சரம், உப தலைவர் திரு க நடராசா, காரியதரி திரு. வே சுப்பிரமணியம், உப-காரியதரிசி திரு அ தம்பியையா, தனதிகாரி திரு. ஏ பேக்மன். திருவாளர்கள் க சரவணபவான், யோ சவிரிமுத்து, க. நடராசா, சி துரைசிங்கம், வே கந்தப்பு வீ வைரமுத்து ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத்தெரிவுசெய்யப்பட்டனர்

(கு வி ம)

## சிலகோரிக்கைகள் ஏற்கப்பட்டன

மாவிட்டபுரம், புதன்

சுன்னாகம் பட்டினசபை ஊழியர் பிரச்னை குறித்து பட்டினசபைத் தலைவருடன் ஐக்கிய ஸ்தல ஸ்தாபன சம்மேளனத்தினர் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

சுன்னாகம் பட்டினசபையில் வேலைபார்க்கும் ஊழியர்களின் சம்பளம் பற்றாக்குறை, நிரந்தரப் பென்ஷன் போன்ற பல பிரச்னைகள் குறித்து பட்டினசபைத்தலைவர் திரு பொன், நாகலிங்கத்துடன் ஸ்தலஸ்தாபன ஊழியர் சம்மேளன உபதலைவர் திரு டி. பி. மெண்டிஸ் யாழ் பிரதிநிதி க குமாரசாமி உட்படப் பலர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஊழியர் பிரச்னை குறித்து சமர்ப்பிக்கப்பட்ட 10 கோரிக்கைகளில் சிலவற்றை நிறைவேற்றுவதாக சபைத் தலைவர் உறுதியளித்தார்,

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org